# திராவிடநாடு

விலை அணா 2  ஆண்டுசந்தா ரூ 7  இலங்கை 15 சதம்  மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 16—11—47 | இதழ் 25

## சிரிக்க வைக்கும் சிந்தனைச் சிற்பி

[ சி. ஏ. இலட்சுமணதாஸ் ]

—✲—

நகைச்சுவை மன்னர் கலை வாணரெனவும்
நற்பெயர்கள் ஓங்கும் என். எஸ். கிருஷ்ணனையே
பகைவரு[illegible]ர் முதல் விருத்தர்களும்
ப[illegible]டன் மெச்சுகின்றார் பாருலகெலாம்
தொகைபல கோடிக் கொரு சூரியனைப் போல்
தோன்றுகிறான் ஆன்றதமிழ்ச் சினிமாவிலே
மிகை படச் சொல்வதல்ல வேடிக்கைகளை
மின்னல் எனப் பாய்ச்சுகிற வீரன் எனினும்.

பிள்ளையது குலநலத்திற் பிறங்குமெனப்
பேணிப் பெரிதுவந்து பெற்ற தாய்க்குச்
சள்ளை தரும் பிள்ளை சணத்தில் பலவேடம்
தரித்துக் காட்சி தரும் தன்மையினால்
உள்ள மிக மகிழ்ந்தாலும் ஓர் புறத்தில்
உலகெலாம் சிரிக்கவே உதித்ததொரு
பிள்ளையினால் பெறும் பேறு இதுவானால்
பிறவேறு செல்வமுண்டோ பெறுவதற்கே.

கற்றறிந்தும் கலை நுணுக்கம் கண்டறிந்தும்
கருணை சேர் பெருமீசைக் கைகள் இரண்டு
பெற்றிருந்தும் நற்குடியிற் பிறந்திருந்தும்
பிழையறப் பேசுகின்ற பெட்பிருந்தும்
தெற்றறிந்தும் தெளிவிலார் செயலறிந்தும்
தேசுலவு சினிமாவிற் சேர்ந்திருந்தும்
நற்றமிழ் நன் நாடு பிற நாடுகளும்
நகைத்துணை யாடுவதின் ஞாயமென்னவோ!

ஆசியங்கள் அத்தனைக்கும் ஆன பொக்கிஷம்
ஆகவிளங்குமிவன் ஆறறிவுளான்
தூஷியங்கள் அத்தனைக்கும் தூரவிலகித்
துரைத்தனஞ் செய்யவல்ல தோழர்களுடன்
பாஷ்யங்கள் செய்வதிலும் பல் வேறான
பாழ்த்த பழங் கொள்கைகளைப் பரிகசித்துத்
தேச நலச்சீர்திருத்தம் செய்யுமிவனைச்
சினிமாவிற்கண்டு மக்கள் சிரிப்பதென்னே!

கண்ணடிப்பிலும் கைகொட்டிப்பிலும் காண்பவர்தம்
கருத்தினைக்கொள்ளை கொள்ளும் கற்பனையிலும்
பண்ணமைப்பிலும் பாடுவதிலும் பதங்களைப்
பலர் பேசும் பாணிகளிற் பகர்வதிலும்
கண்ணியத்திலும் ரசனைசேர் புதுமையிலும்
பொறை தயை நிறைமதி புத்துணர்விலும்
திண்ணனிவன் சீதமுகம் திரையுலகில்
தெரிந்தும் பொதுஜனம் சிரிப்பதென்னே!

# ❀ வியட்நம் வேண்டுகோள் ❀

(இரா. முத்துலிங்கம்.)

"இந்தியா எங்களுக்கு உதவ வேண்டும். எங்கள் பிரச்சனையை ஐக்ய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கவும்; அங்குள்ள பல தலைவர்கள் அடங்கிய தூதுக்கோஷ்டி ஒன்றை அனுப்பி இங்குள்ள நிலைமையை ஆராயுங்கள்."

இது வியட்நம் உரிமையோடு விட்ட வேண்டுகோள். ஆசிய நாடுகளை, ஐரோப்பிய நாடுகள் ஆக்ரமிப்பதை ஐக்ய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள், சமர்ப்பித்து, விடுதலைக்காகச் சமர் செய்யும் ஆசிய நாட்டிற்கு ஆதரவளிக்கவேண்டும் என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது.

"ஒரு நாள் இந்தியாவின் கை வலுவடையும். அன்று ஆசியாவின் விடுதலைக்காக அது போராடும்."

இந்தக் குரல்—பண்டித நேருவின் குரல். மலாயாவில் நின்றுகொண்டு மானிலம் அறியக்கூறியது. இந்தக் குரலிலே ஏற்பட்ட நம்பிக்கை தான், அன்னிய அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்ததோடு நில்லாது, அடிமை நாட்டிற்காக ஐக்ய நாடுகள் சபையில் போரிடும் இந்தியாவிற்கு—வியட்நாம் நாளைக் கொண்டாடிக் குருதியைத் தரையில் சிந்திய இளம் மாணவ, மாணவிகளைக் கொண்ட இந்தியாவிற்கு, வேண்டுகோள்விடச் செய்தது. அடிமைச் சங்கிலியை அறுத்தெறிந்த கரத்திற்கு மீண்டும் கடும் விலங்கிடும் காதகச் செயலைக் கண்டிப்பதில் கட்சி வேற்றுமை குறுக்கிட விடக்கூடாது. "இந்தோநேசியாவை அடிமைப்படுத்தச் செல்லும் டச்சு ஏகாதிபத்யமே இந்திய மண்ணில் காலைவைக்காதே" என்று நாம் கூறவில்லையா? எங்கேயாவது இதற்கு எதிர்ப்பு எழுந்ததா? இல்லை. எனவே வியட்நமுக்கு (இந்தோசீனாவுக்கு) நாம் கட்சி வேற்றுமையின்றி உதவமுடியும்.

* * *

வணிகம் நடத்த இந்தோசீனாவுக்குச்சென்ற பிரஞ்சு ஏகாதிபத்யம் தங்களுக்குக்கிடைத்த தனிச்சலுகைகளைக் கொண்டு மட்டும் திருப்தியடையாது, 1867ல் கொச்சின் சீனாவையும் 1883-84ல் இந்தோ சீனா முழுவதையும் அண்டை நாடுகளான லயோஸ், கம்போடியாவையும் கைப்பற்றியது. அந்நிய ஆட்சிக்கு ஆரம்பத்திலிருந்தே அங்கு வாழும் மக்கள் எதிர்ப்புக் காட்டினார்கள். எதிர்ப்பெல்லாம் ஏகாதிபத்யத்தின் அடக்குமுறையால் அழிக்கப்பட்டது.

சீனாவில் ஐரோப்பியர் செய்தது போலவே, அபினியைக் கொண்டு மக்கள் அறிவைக் குலைக்கும் பணியை ஆட்சியாளர்கள் செய்தனர். மக்கள்—மன்னர்கள், இவர்களின் எதிர்ப்பை மட்டந் தட்டி 19ம் நூற்றாண்டு இறுதியில் பிரஞ்சு ஆட்சி பலப்படுத்தப்பட்டது. 1907-ல் ஏகாதிபத்யம் விதித்த தலைவரிக்கு (Poll tax) ஏற்பட்ட எதிர்ப்புத்தான் முதன் முதலில் தோன்றிய தேசியப் போராட்டம். அது அவனியிலுள்ள அடிமை நாட்டு மக்கள் "அன்னியர்க்கு அடிமைப்பட்டு அடங்கி அயர்ந்து இரோம்" என்று வீறுகொண்டெழுந்து ஏகாதிபத்யத்தை எதிர்த்துப்போரிட்டுக்கொண்டிருந்த சமயம், உலகை வியக்கச் செய்த நவம்பர் புரட்சிக்கு ருஷ்யாவில் அடிகோலிக் கொண்டிருந்த சமயம்; ஆங்கிலேயரை எதிர்த்துச் சீனர்கள் "பாக்ஸார் கலகம்" நடத்திக்கொண்டிருந்த சமயம்.

1908-ல் டாங்க் கிங்க் தகியா தக் என்ற அரசியல் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. பாமர மக்களின் சக்தியை ஒன்றுபடுத்தும் பணியில் அது இறங்கவில்லை. ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட அடக்குமுறையால் இந்தக் கட்சி அழிக்கப்பட்டது. தொழிலாளி விவசாயிகளின் ஆதரவுஇன்றி எந்த போராட்டமும் வெற்றிகாண முடியாது என்ற உண்மையை புரட்சி மனப்பான்மை கொண்ட இளைஞர்கள் இதனால் உணர ஆரம்பித்தனர்........

ஈடு இணையற்ற நவம்பர் புரட்சி 1917-ல் வெற்றியடைந்தது. சன்யாட்சன் பிற்போக்கு வாதிகளையும் அன்னியர்களையும் எதிர்த்துச் சீனாவில போரிட்டுக் கொண்டிருந்தார். போராட்டத்திற்குப் பயிற்சி பெறச் சிலர் சீனாவிற்கும், நவம்பர் புரட்சி வெற்றியின் உண்மைகளை அறிய சிலர் ருஷ்யாவிற்கும் 'கள்ளத்தனமாக'ச் சென்றனர். ரஷ்யாவிற்கு சென்றவர்களுள், இன்று வியட்நம் குடியரசுத் தலைவரான ஹோசிமினா ஒருவர்.

1929-30-ல் ரகசியப் புரட்சி ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. பொதுமக்களும், மாணவர்களும், தொழிலாளர்களும் கிளர்ச்சி செய்தனர். இந்த சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியது. 1930, பிப்ரவரி 9-ல் யேன்பேவில் உள்ள சிப்பாய்கள் கலகம் செய்தனர். ஆதிக்கம் வகிக்கும் பல பிரஞ்சு ஆபீசர்கள் கொல்லப்பட்டனர். ஹனுயில் போலிஸ் ஸ்டேஷனும் அரசாங்க அலுவலகங்களும் தீக்கிரையாயின. தங்கள் குறைகளைப் போக்குமாறு பொது மக்கள் பிரஞ்சு அதிகாரிகளை நிர்ப்பந்தம் செய்தனர். மிகப்பெரிய

(4-ம் பக்கம் பார்க்க)

---

20-ம் பக்கத் தொடர்ச்சி

கெடுதல் ஏற்படாவண்ணம் ஓர் ஒப்பந்தஞ் செய்துகொள்வதன் மூலம் நிலைமை சமாளிக்கப்படக்கூடும். இந்தியர்களிடத்தும், ஏனை இரு நாட்டாரிடத்தும் இதுவரையில இருந்து வந்த சுரண்டல் கொள்கை இனி மேல் அடியோடு அற்றுப்போக வேண்டியதுதான். பர்மாவை மூன்று நாடுகள் சுரண்டுவதைப் போலவே திராவிடத்தைபு பிரிட்டன், வட நாடு என்ற இரு பகுதியினைச் சேர்ந்தோரும் [illegible]ண்டி வருகிறார்கள். பிரிட்டன[illegible] சுரண்டல் குறைந்து வருகிறது; நாளடைவில் குறைந்து விடும். வடநாட்டின் சுரண்டல் மட்டும் நீங்கவில்லை என்பது மட்டு ல்ல, வளர்ந்துகொண்டு போகிறது. பர்மாவைப்போல் திராவிடமும் விடுதலை பெற்றால் வடநாட்டுச் சுரண்டலைத் தடுத்துத் தன்னைத்தோங்கி வளர ஏது ஏற்படும்.

சென்ற ஐந்தாறு ஆண்டுகளாகப் பாம்பின் வாயில அகப்பட்ட தேரையைப்போல், சொலலொணாத் துன்பமடைந்த பர்மிய மக்கள் விடுதலை பெறுகிறார்கள்! மூன்று ஆண்டுகளுக்குமுன் தங்கள் சொந்த நாட்டைவிட்டு அகதிகளாய் ஓடும் நிலை அவர்களுக்கு! இன்று விடுதலை அவர்களை நெருங்குகிறது! ஆ! தளைகள் உடைபடுகின்றன! விலங்கு விடுபடுகிறது!

# மாங்கல்யத்தை விற்று மகேசுவர பூசை செய்வதா?

[நக்கீரன்]

காலனைக் காலால் உதைத்ததாகச் சொல்லப்படும் கடவூர்ச்சிவனுக்குக் குங்குலியத் தூபம் இடும் பணியை மேற்கொண்டவர் அவ்வூர்ப் பார்ப்பனகுலத்துக் கலயனார் என்பவர். தூபமிடும் பணியை மேற்கொண்டதால் கலயனாரின் செல்வம் எல்லாம் சுருங்கி வறுமை வந்துற்றது. அவர், தமக்குள்ள நிலபுலங்களையும் பிறவற்றையும் விற்று அந்த அரும்பணியினை அயராது செய்தார். வறுமையென்னும் கொடுமையால் அவரும் அவருடைய மனைவி மக்களும், மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் இரண்டு நாள் பட்டினி கிடந்தனர். அந்நிலை கண்டு மனம் பொறாத கலயனாரின் மனைவி, தம்முடைய தாலியைக் கணவனிடம் தந்து, "இதற்கு நெல் வாங்கி வாரும்" என்றாள். தாலியை பெற்றுச் சென்ற கலயர், அதனை, ஒரு வணிகனிடம் கொடுத்து, அதற்குப்பெறுமானகுங்குலியப்பொதியை வாங்கிச்சென்று சிவனுக்குத் தூபமிட்டுச் சிவனை வணங்கிக்கொண்டு கோயிலிலேயே இருந்தார்.

வீட்டில், கலயனாரின் மனைவி மக்களும் பிறரும் பசிக்கொடுமையால் வருந்தி வருந்தி உறங்கிவிட்ட சமயம், சிவனார் அங்கு சென்று, அவ்வீடு முழுவதும் நெற்குவியலும் பொற்குவியலும் பிறவும் நிரம்பும்படி செய்து, அதனை அம்மையாருக்குக் கன[illegible] உணர்த்தி, உடனே கோயிலு[illegible]ம் சென்று, அங்கு உறக்கத்திலிருந்த கலயனார் கனவிலுந் தோன்றி, "நீ பசியால் வருந்துகிறாய், வீடுபோந்து உணவு கொள்வாயாக" என்று கட்டளையிட்டார்.

இஃதிங்ஙனமாகத், திருப்பனந்தாளில் உள்ள சிவலிங்கம் ஒன்று சாய்ந்துவிட்டது. அச்சாய்வை நிமிர்த்த விரும்பிய அவ்வூர்மன்னன் தன்னிடமுள்ள சேனை யானைகளை எல்லாம் பூட்டிச்சிவலிங்கத்தை இழுப்பித்தான். சிவலிங்கம் நிமிரவில்லை. இதனையறிந்த கலயனார், அங்கு சென்று சிவலிங்கத்திற்பூட்டியுள்ள கயிற்றைத் தன்னுடையகழுத்தில் பூட்டி இழுத்தார். சிவலிங்கம் நிமிர்ந்துவிட்டது. பின்னர், கலயர் திருக்கடவூருக்குப் போய்' அங்கு வந்த சம்பந்தரையும், திருநாவுக்கரசரையும் கண்டு, அவர்கள் அருளைப் பெற்றுச் சிலநாள் இருந்து ஆண்டவனுடைய திருவடி நீழலை அடைந்தார் என்பது பெரியபுராணத்தில் பேசப்படும் குங்குலியக்கலய நாயனாரைப்பற்றிய வரலாறாகும்.

இவ்வரலாற்றில்பேசப்படும்கலயர் என்பவர், ஒரு பார்ப்பனன் என்று சொல்லப்படுவதால், அவர், தம் குலத்தொழிலுக்கேற்பக், கடவுளுக்குத்தூபம் இடும் பணியை மேற்கொண்டிருந்தார் என்பதைத் தவறென்றோ—குற்றமென்றோ எவராவது சொன்னால், சொன்னவர்பார்ப்பனப்பகைவர் என்ற பழிக்குஆளாக நேரிடுமாகையால், அதனைக் குற்றமென்று நாமும் கூறாது விட்டுவிடுவோம். இன்றுங்கூடச், சிவ—விட்டுணு முதலான இந்துக்கடவுளரின் தூப-தீப-நைவேத்ய-பூசை - விழாக்கள் எல்லாம் பார்ப்பனர் கைப்படவேசெய்யப்படுகின்றன-செய்யப்படவேண்டுமென்ற சட்டமுமுள்ளதாகையால், நாம் அதில் தலையிட்டால், நம்மையும் பார்ப்பனப் பகைவன் என்ற பழிக்கு ஆளாகும்படி செய்துவிடுவர். எனவே, நமக்குஏன் அந்த வேண்டாத வேலைஎன்றுவிட்டுவிடலாம்.

இனித், தம்முடைய செல்வம் முழுவதையும் சிவனுக்குக் குங்குலியத் தூபம் இடுவதில் செலவுசெய்து, அதனால் தாங்கமுடியாதவறுமைக்கு ஆளானார் திருக்கடவூர்க் கலயனார் என்ற பார்ப்பன அன்பர் என்றும்

(17-ம் பக்கம் பார்க்க)

## போதாது! தரவில்லை! கேட்டோம்!

—

எந்தப் பொருளாக இருக்கட்டும், இங்கு தேவைப்படும் அளவுக்கு, மத்ய சர்க்கார் தருவதுமில்லை—தருவதாகக் குறிப்பிடும்அளவும், அனுப்பப்படுவதில்லை. உணவு, உடை, விஷயத்தில் மட்டுமல்ல, எதிலும். சென்னை சட்டசபையில், தொழில் மந்திரி, கனம். சீதாராமரெட்டியார், நிலக்கரி பற்றி கேள்வி கிளம்பிய போது "இந்த மாகாணத்துக்குத் தேவைப்படும் அளவு நிலக்கரி, இப்போது மத்ய சர்க்காரால், நமது மாகாணத்துக்கு ஒதுக்கப்படவில்லை. குறித்த அளவு, நிலக்கரியும் அனுப்பப்படவில்லை. போதாது என்று சொன்னோம், அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டோம். முடியாது என்று மத்ய சர்க்கார்கூறிவிட்டது" என்று தெரிவித்தார்!

பலர் பொருந்திய மத்யசர்க்கார் வேண்டுமென்பவர்களின்பார்வைக்கு இந்தச்சிற்றுண்டி.

தேவையான அளவு உணவுப் பொருள் இல்லை என்றால், மத்யசர்க்காரைக் கேட்க வேண்டும். ஆடை தேவை என்றால், அதற்கு வடக்கு நோக்கவேண்டும். அதிகாரம் தேவை என்றால், அங்கேதான் பார்க்க வேண்டும்! ஜெமீனை ஒழிக்க அங்கு சென்றே முத்திரை மோதிரம் பெற்று வர வேண்டும். இனாமை ஒழிக்க அங்குதான் அனுமதி பெற வேண்டும். ஆலைக்குக் கதிர்கள் தேவையானால், அங்குதான் சென்றாக வேண்டும். ஆளவந்தார்களுக்குள் தகராறு ஏற்பட்டால், அங்கு சென்றே, வழக்குரைத்து வாயலில் நிற்க வேண்டும். புதிய தொழிற்திட்டம் போடுவதானால், அங்கு என்ன கூறுகிறார்கள் என்பதை அறிந்தே ஆகவேண்டும். பணம் தேவை என்றால் அங்கே! பண்டம் தேவை என்றால், அங்கே!—இப்படி எதற்கும், கையேந்தும் நிலை, இருக்கிறது. இருப்பதாவது, இடைஞ்சலற்று உள்ளதா என்றால், அதுவுமில்லை, எதற்கெடுத்தாலும், தொல்லை. இங்குள்ள அவசியத்தை உணர்ந்து நீண்டதூரம் பிரயாணம் செய்து அங்கு சென்று, குறை கூறிக் களைய வேண்டுமென்று கேட்டால், இது சமயம் முடியாது! என்பதே, பதிலாகக் கிடைக்கிறது. இதை ஒளிவு மறைவு இன்றி, அத்துடன் வெட்கமும் துக்கமும் இன்றி, இந்நாட்டுத் தலைவர்கள், கூறியும் விடுகிறார்கள். போதவில்லை என்று கேட்டோம், தருவதற்கு இல்லை என்பதாகச் சொன்னார்கள், என்று!

இந்த நிலைக்கு, என்ன பெயர்?

## வியட்நாம் வேண்டுகோள்

2-ம் பக்கத் தொடர்ச்சி

அடக்குமுறை தாண்டவமாடியது. ஆயிரக்கணக்கான வியட்நாம் மக்கள் பிரெஞ்சுக்காரர்களின் குண்டுவீச்சுக்கு பலியாயினர். பல புரட்சி வீரர்கள் கடுந்தண்டனைக்குள்ளானார்கள். "வியட்நாம் வாழ்க" என்று கூறிக்கொண்டே பல பகத்சிங்குகள் தூக்குமேடை யேறினார்கள். கம்யூனிஸ்ட் கட்சி இந்த சமயத்தில் பாமர விவசாய தொழிலாளிடேயே தீவிரமாக பரவியது. அன்னுமில் தற்காலிக சர்க்காரை நிறுவி விவசாயிக்கு நிலத்தை பிரிப்பதுபோன்ற சீர்திருத்தங்களை செய்தனர். பிரஞ்சு அடக்குமுறையை நோக்கி இந்த ஆட்சி அனேக நாள் நீடிக்கவில்லை. இதையடுத்து பலகுமரன்கள் கொல்லப்பட்டனர். பல வ. உ. சிகள் நாடுகடத்தப்பட்டனர். கம்யூனிஸ்ட்கட்சியை'ஒழிப்பதென' ஏகாதிபத்யம் கங்கணம்கட்டியது.

1936ல் தேசிய ஐக்ய முன்னனி நிறுவப்பட்டது. இதில் சர்வ கட்சியினரும் பங்கு கொண்டனர்.

1939-ல் ஆதிக்க வெறியர்களால் இரண்டாவது போர் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து 40-ல் பிரஞ்சு சர்க்கார் வீழ்ச்சியுற்றது. வியட்நாமை ஆண்ட பிரஞ்சு பிரதிநிதியான அட்மிரல் ட்ரூக்ஸ் ஜப்பானியருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு தென் கிழக்கு ஆசியநாடுகளை ஆக்ரமிக்க ஜப்பானியப் படைகள் வியட்நாம் வழியாக செல்வதை அனுமதித்தான். 25,000 ஜப்பானியத் துருப்புகள் வடக்கு வயட்நமில் நுழைந்தது.

தங்கள் தாய்த்திருநாடு பிரஞ்சு ஏகாதிபத்யத்தின் கையில் இருந்து ஜப்பானியர் கைக்கு மாற்றப்படுவதை வியட்நாம் வீரர்கள் உணர்ந்தார்கள். இதை எதிர்தது மாணவ, விவசாய, தொழிலாளி வர்க்கம் மிகப்பெரிய போராட்டத்தை (கொரில்லா போராட்டத்தையா) ஆரம்பித்தது. பிரஞ்சு ஏகாதிபத்யமும் ஜப்பானிய ஏகாதிபத்யமும் கைகோர்த்துக் கொண்டுஅடக்குமுறையைப்பிரயோகித்தது. பிரட்டனின் 'தலையீட்டையும்' சீனுவின் உதவியையும் எதிர்பார்த்து வியட்நம் வீரர்கள் ஏமாந்தனர். பின்னர் கொரில்லாப் படைகள் பின்வாங்கி காட்டில் நுழைந்து கொண்டன. நாட்டில்நாணயச்செலாவணி பெருகிற்று. விலைவாசி விஷம் போல் ஏறியது.

ஜப்பானியரை எதிர்க்க வியட்நாம் சுதந்திர லீக் (வியட்நமின்) 1940-ல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் எல்லா முற்போக்கு கட்சிகளும் பங்கு கொண்டன. ஜப்பானியபாசிஸத்தை எதிர்த்து போரிட தங்களுக்கு உதவும்படி பிரஞ்சியரை, சுதந்திரலீக் 44, ஜுலை 23-ல் அறைகூவிஅழைத்தது. ஆனால் பிரஞ்சியயர்கள் ஜப்பானியர்களுக்கு உதவி செய்தனர். ஜப்பானியரை எதிர்க்க, சுதந்திரலீக் மக்களைத்திரட்டிக் கொண்டிருந்தது. இந்த சமயத்தில் ஹோசிமின் சுதந்திரலீகின் தலைமை ஏற்றார்.

பிரான்சில் 45, மார்ச் 9-ல் விச்சி சர்க்கார் வீழ்ச்சியடைந்தது. இந்தோசீனு வடக்கு பகுதியில் வங்கப் பஞ்சத்தின் முழுவாடைவீசியது. போர்வீரர்கள் பலர் ஆயுதங்களுடன் காட்டிற்கு ஓடி கொரில்லா படைகளுடன் சேர்ந்துகொண்டனர். அன்னும் அரசன் ... தாய் தலைமையில் ஒரு பொம்மை சர்க்காரை நிறுவி 'சுதந்திரசர்க்கார்' என்று ஜப்பானியர் பறைசாற்றினர்.

ஆகஸ்டு 18-ல் கொரில்லாப்போர் ஆரம்பிக்கப்பட்டது. ஹோசிமின் தலைமையில் கொரில்லாப் படைகள் ஹனுயை அடைந்தது. ஆகஸ்ட் 25-ல் ஹோசிமின் தலைமையில் வியட்நம் மாகாண சர்க்கார் நிறுவப்பட்டது. அதே சமயத்தில் ட்ரான் வான் க்யூ தலைமையில் கொச்சின் சீனுவில் சுதந்திர சர்க்கார் நிறுவப்பட்டது. இவ்விதம் எண்பது ஆண்டு இணையற்ற போராட்டம் வெற்றியடைந்தது. போருக்கு பின் தோன்றிய புத்துலகில் பூத்த முதல் ஜனநாயக மலர் இதுவே.

செப்டம்பர் 2-ந் தேதியை சுதந்திர தினமாக பொதுமக்கள் கொண்டாடினர். இந்த சமயத்தில் செய்கானுக்கு (கொ. சீனுவின் தலைநகர்) இந்திய துருப்புக்களை பிரிட்டன் அனுப்பித்தது. இந்திய— கூர்க்கப் படைகளை வஞ்சனையின்றி வியட்நம் மக்கள் வரவேற்றனர். வானளாவ வாழ்த்தினர். ஆனல் 23-தேதி, குழந்தைப் பருவத்தில் இருந்த குடியரசைக் கொல்ல பிரஞ்சு-ஆங்கிலோ ஏகாதிபத்யம் முயற்சித்து இந்தியப் படைகளை ஏவியது.

"எங்களைப்போலவே உங்கள் தாய்நாட்டில் உங்கள் தேசத்தவர்கள் சுதந்திரத்திற்காகப்பாடுபடுகிறுர்கள் இருவரும் ஒரு நோக்கத்துடன் இருக்கிறோம். நம்மை பிறர் பிரிப்பதற்கு அனுமதியாது இருவரும் தோளோடு தோள் நின்று போராடுவோம். இதுவே எங்களுடைய-சமாதானம் விழையும் எங்களுடைய இதய ஒலி" என்று வேண்டினர், வேண்டுகோள் வீணுயிற்று. பிரஞ்சு-ஆங்கிலோ துருப்புகளுக்கும் வியட்நம் மக்களுக்கும் போர்மூண்டது. இரத்தம் வீதியில் ஓடியது. கொச்சின் சீனு சர்க்கார் "வீழ்ச்சி"யுற்றது. வியட்நம் ஆண்களும் பெண்களும் வீதியில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டனர். வெஞ்சினம் கொண்ட வியட்நம் தொழிலாளி வர்க்கம் வேலை நிறுத்தம் செய்தது. பல பிரஞ்சு ஆலைகள் தீக்கிரையாயின.... கொச்சின் சீனு மக்கள் கொரில்லா போர் நடத்தினர்கள்.

இதே சமயத்தில் வடக்கில் (தாங்கின்) சீனப்படைகள் நுழைந்தன. ஹோசிமின் சர்க்காரை நீக்கிவிட்டு தங்கள் கைக்கூலிகளைக் கொண்ட பொம்மை சர்க்காரை அமர்த்த முயன்றனர். முடியவில்லை. 46, ஜனவரியில் நடந்த பொதுத் தேர்தலில் ஹோசிமினுக்கு பெரும் ஆதரவு கிடைத்தது. இதனுல் ஹோசிமின் சர்க்கார் (வியட்நம் குடியரசு) பலப்படுத்தப்பட்டது. தங்கள் ஆதிக்கம் வடக்கு பாகத்தில் இல்லாமல கொச்சின் சீனுவில் கொடி கட்டி ஆள முடியாது என்பதை உணர்ந்த பிரஞ்சு ஏகாதிபத்யம் வேறு வழியின்றி 46 மார்ச் 6-ல் ஹோசிமின் னுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.

1. ஹோசிமின் சர்க்காரை அங்கீகரித்தல்.

2. கொச்சின் சீனு வியட்நமில் சேருவதா? இல்லையா? என்பதை ஒரு பொதுத் தேர்தல் மூலம் (by a referendum) நிர்ணயிப்பது. இவை தான் ஒப்பந்தத்தின் முக்கிய ஷரத்துக்கள்.

மார்ச் 6, உடன்படிக்கையை மீறி ஜுன்1ல் கொச்சின்சீனுவில் டாக்டர் திங்க் தலைமையில் ஒரு பொம்மை சர்க்காரை பிரான்ஸ் ஏற்படுத்தியது. சுருக்கமாகக் கூறினல் இந்தோ சீனுவின் நெற்களஞ்சியமான கொ.சீனு தங்கள் காலடியில் இருக்க எல்லா முயற்சிகளையும் செய்தனர்—செய்கின்றனர்..........இவற்றை எதிர்த்து பிரகன்சில் பவுன்டர்ப்ளூவில்

பிரஞ்சியரோடு ஹோசிமின் சம்பாஷணை செய்து கொண்டிருந்தார். அதே சமயத்தில் தெற்கு அன்னாமைச் சேர்ந்த ஒரு இடத்தைப் பிரஞ்சுத்துருப்புகள் கைப்பற்றின. வேண்டுமென்றே சம்பாஷணையை பிரான்ஸ் நீடிக்கச் செய்தது. இறுதியில் சம்பாஷணை முறிந்தது.

ஒப்பந்தம்-சம்பாஷணை, இவற்றை பயன்படுத்திக் கொண்டு தாக்குதலுக்கு தயார் செய்தது ஏகாதிபத்யம். ஹெய்பாங்கிலும் வியட்நாம் குடியரசின் தலைநகரான ஹனாயிலும் தாக்குதலை பிரான்ஸ் ஆரம்பித்தது. உலகஜனநாயகவாதிகளின் உதவியை ஹோசிமின் வியட்நாம் சார்பாகக் கோரினார்.

இந்தக் கோரிக்கை வீண் போகவில்லை. இந்தியா முழுதும் 47 ஜனவரி 21ந்தேதியை வியட்நாம் நாளாகக் கொண்டாடப்பட்டது. கல்கத்தாவில் இந்தக் கொண்டாட்டத்தை போலீஸ் தர்பார் எதிர்த்தது இதை எதிர்த்து மறுநாள் 120,000 தொழிலாளர்களும் 50,000 மாணவர்களும் வேலைநிறுத்தம் செய்தனர். அமென்னூ என்ற பள்ளிச் சிறுவனும், அனிதாபோஸ் என்ற சிறுமியும் போலீஸ் துப்பாக்கிக்கு இரையானார்கள். இந்தோசீனாவைத் தாக்க இந்தியாவின்வழியாகச்செல்லும்பிரஞ்சுக் கப்பல்கள், விமானங்களைப்பகிஷ்கரிக்கும்படி துறைமுகத் தொழிலாளர்களை அகில இந்திய தொழிற்சங்கத் தலைவர்கள் வேண்டுகோள்விட்டனர். இந்தோசீனாவை அடிமைப்படுத்திவிடலாம் என்று மனப்பால் குடிக்கும் பிரஞ்சு ஏகாதிபத்யத்தின் மண்டையில் விழுந்த பலத்த அடி இது.

நாம் வியட்நாமுக்குப் பூரணமாக உதவிவிட்டதாக எண்ணிஇறுமாந்து விடவேண்டாம். இடைக்கால சர்க்காருக்குத்தெரியாமல் ஆங்கிலராணுவத் தளகர்த்தர்கள் இங்கிருந்து 3000 பாரசூட்டைத் தங்கள்நண்பர்களான பிரஞ்சியர்களுக்கு விற்றனர். இன்றும் சில பிரஞ்சு விமானங்கள் இந்தியாவின்வழியாகச் செல்வதாகக்கூறப்படுகிறது. "இந்தோசீனாவை அடிமைப்படுத்தச்செல்லும் பிரஞ்சுவிமானங்கள் இந்தியாவில் இறங்க அனுமதிக்கப்படாது" என்று பண்டித நேரு திட்டமாகக் கூறியிருப்பது உண்மைதான். ஆனால், இந்தோசீனாவிற்கு வைத்தியஉதவிக்காகச்சென்றிருந்த பிரஞ்சு விமானம் பெங்களூர் தொழிற்சாலையில் ரிப்பேர் செய்யப்பட்டது என்பதை நேருவே மத்ய சட்டசபையில் ஒத்துக்கொண்டார். இன்னும் வியட்நாம் குடியரசை இந்தியா அங்கீகரிக்கவில்லை. ஏன்? தனி சுதந்திர அரசாங்கம் என்று அழைக்க அருகதையற்று அமெரிக்காவின் 'அரை அடிமை' நாடாக இருக்கும் சீனாவை—நான்கிங் சர்க்காரை— அங்கீகரிப்பதில் காட்டிய அவசர அவசியம் இதில் காட்டப்படாதது ஏன்?

"புதுச்சேரி மக்களைக் கொண்டு தான் எங்களை பிரான்ஸ் அடிமைப் படுத்தியது. விடுதலைபெற்ற எங்களை உங்கள் துருப்புகளைக்கொண்டு தான் மீண்டும் அடிமைப் படுத்தியது. இன்றும் எங்களைத் தாக்க உங்கள் நாட்டு வழியாகத் தான் பிரஞ்சு விமானங்கள் வருகின்றன. எனவே எங்கள் விடுதலை உங்கள் கையில் உளது"

இது வெதும்பிய உள்ளத்திலிருந்து வெளிவந்தசொற்கள்—அக்டோபர் 16-ல் டெல்லி ரோட்டரி கிளப்பில் கூறியது. நாம் கடமையை உணர்ந்து கட்சி பேதமற்று உதவவேண்டும்—உதவமுடியும்.

எனவே காலம் கழிக்காது இந்தியாவும் பாகிஸ்தானும் வியட்நாம் குடியரசை அங்கீகரித்து, வியட்நாம் பிரச்னையை கூட்டாக ஐக்ய நாடுகள் பொதுச்சபையில் எழுப்பவேண்டும்.

✱

# வெற்றி—வேலை

புதுக்கோட்டை மக்கள் வெற்றி பெற்றுவிட்டனர். நமது மகிழ்ச்சியும், பாராட்டுதலும் அவர்களுக்கு. மன்னரும் அவருக்கு ஆலோசனை கூறுவோரும் மதியூகத்துடன் நடந்துகொண்டனர். நாம் பாராட்டுகிறோம்.

வெற்றி! ஆனால், புதிய வேலை, புதிய பொறுப்பு, மக்களுக்கும், அவர்களை நடத்திச் செல்லும் தலைவர்களுக்கும், ஏற்பட்டுவிட்டது.

ஏதேனும் ஓர் இடையூறைக் காரணம் காட்டி, அந்த ஒரு தொல்லை மட்டும் தீர்ந்துபோகுமானால், ஆஹா! என்னென்ன நன்மைகள் ஏற்படும் தெரியுமா, என்று அடிமூச்சுக் குரலால் பேசுவதும், இன்பக் கனவுகள் காண்பதும், நல்வாக்குக் கூறுவதும், எளிது, சுவையுமுள்ளது, சுலபத்திலே மக்கள் மனதிலே ஆசையைக் கிளறிவிடக் கூடியதுமாகும். ஆனால், இடையூறு ஒழிக்கப்பட்டு, 'இனி உன் பொறுப்பு, ஆக்குவதும் அழிப்பதும்' என்று வாய்ப்புத் தரப்பட்ட பிறகு, ஏற்படும் நிலை இருக்கிறதே, அப்போதுதான், சொல்லுக்கும் செயலுக்கும், நாவுக்கும் மனதுக்கும், கனவுக்கும் நினைவுக்கும், கற்பனைக்கும் கடமைக்கும், இடையே உள்ள மோதுதல், விளக்கமாகத் தெரியும்.

புதியதோர் பொறுப்பைக், கேட்டுப் பெறுகின்றனர் புதுக்கோட்டை மக்கள். இதனை உணர்ந்து, தலைவர்கள், தக்க திட்டங்களை, அனைவரையும் கலந்து தீட்டி, நேர்மையுடனும், நெஞ்சுறுதியுடனும், வெற்றிகரமாக நடத்திக் காட்டவேண்டும்.

மன்னராட்சியைப், புதுக்கோட்டையில் மட்டுமல்ல, எங்கும், எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதற்குக் காரணம், அரண்மனைக்குள் இருப்போருக்கு, அந்தி சந்தி வேளைகளில், ஆளின் கீழும் அரசின் கீழும் அரை வயிற்றுக் கஞ்சியும் கிடைக்காமல் அல்லற்படும் மக்களின் துன்பங்களை அறிந்து, ஆவன செய்யமுடியாது என்பதுதான்.

மக்களாட்சி ஏற்பட்டதும், இந்தக் கவலை, கொடுமை, ஒழிக்கப்படுவதற்கு, ஆட்சியாளர்கள் துணிந்து, காரியத்தில் இறங்கவேண்டும்.

முடி தரித்தவன் நான், எனவே என் சொல்லே சட்டம், என்ற தத்துவத்தைத் தகர்த்துவிட்ட பிறகு, பிரச்சார பலத்தால், மக்களை என் பிடியில் கொண்டுவந்து விட்டேன், எனவே, நான் சொல்வதே சட்டம், என்று கூறத்தான், முடிசூடா மன்னர்களுக்குத் தோன்றும். ஆனால், இது, கேடு தரும் மனப்போக்கு, முடி தரித்த மன்னன் செய்யும் கொடுமையைவிட, பிடிகொண்ட தலைவர்கள், எதேச்சாதிகாரிகளானால், மக்கள் இரத்தக் கண்ணீர் வடித்து, அதனிலும் இது கொடிது என்று அவதியுற நேரும்.

(12-ம் பக்கம் பார்க்க)

மனப்பண்பு.

# சாது

—⊛—

## வேலாயுதம்

"பரமசாது, நம்ம தோட்டக்காரன். கோபம், துளிகூடக் கிடையாது. எனக்குச் சற்று முன்கோபம் வருமல்லவா! அதனாலே ஒவ்வொரு நாள் அவனைக் கண்டபடி திட்டிவிடுவேன், கழுதே, நாயே, கட்டி வைத்து உதைக்கிறேன் பார், என்றெல்லாம். கோபிக்கவே மாட்டான். அவ்வளவு சாது. தலையைக் குனிந்தபடி நிற்பான். எதிர்த்து ஒரு பேச்சும் பேசவே மாட்டான். ஒருநாள், என்னமோ மனக்கஷ்டம் எனக்கு—அந்தச் சமயத்திலே, அவன், ஏதோ தவறு செய்துவிட்டான், அதனாலே வந்த கோபத்தில், எதிரே இருந்த என்செருப்பைத் தூக்கி வீசினேன், பயல்மீது—நல்லவேளை அவன்மீது படவில்லை. அப்போது கூட அவன் கோபித்துக் கொள்ளவில்லை. கீழே விழுந்த செருப்பை எடுத்துவந்து, பழையபடி, இருந்த இடத்திலேயே வைத்துவிடுத், தன்வேலையைக் கவனிக்கச் சென்றான். அவ்வளவுசாது, என் தோட்டக்காரன். நான் பார்த்ததேயில்லை அப்படிப்பட்ட அபூர்வமான குணமுள்ளவனை. பரமசாது."

* * *

## வள்ளி

"பூமாதேவி பொறுமைசாலி என்று சொல்கிறார்களே, அதுதப்பு. நம்ம, பொட்டைக்கண்ணி, போலச் சாது இந்தப் பூலோகத்திலே வேறு யாரும் இருக்கமாட்டார்கள். அவளுடையபுருஷன், அவளைப் படுத்துகிற பாடு, அடடா! தெய்வங்கூடச் சகிக்காது. நின்னாஉதை, குனிந்தாக்குத்து. ஒருகாரணமுமில்லாமல் சண்டை போட்டு, அவளை, நாயைப் பேசுகிற மாதிரியாப் பேசி, கையிலே கிடைச்சதை எடுத்து வீசி, நாசம் செய்கிறான். குழம்பிலே ஏண்டி காய் இல்லே, காயிலே ஏண்டி ருசி இல்லே, மாடத்திலே ஏண்டி காசு இல்லே, பிள்ளை ஏண்டி தூங்கவில்லே, பேசினா ஏண்டி பதிலில்லே, என்று, இப்படி விநாடிக்கு விநாடி 'டி' போட்டு,த் திட்டியபடி இருப்பான். இவ்வளவு உதையையும் பட்டுக்கொண்டு, அந்தப் புண்ணியவதி, பாவம், வாய்திறந்து ஒருவார்த்தை பேசமாட்டா பதிலுக்கு. அவ்வளவு சாது—அவ்வளவு பொறுமைசாலி, நான் எவ்வளவோ பேரைப் பார்த்திருக்கிறேன், அவளைப்போல, அடக்க ஒடுக்கமானவளைக் கண்டதே இல்லை. கோணல் சேட்டை ஆடுகிறதைப் பொறுத்துக்கொண்டு, எப்படியோ, குடித்தனம் செய்கிறா, அந்தப் புண்ணியவதி. சாது. பரமசாது."

* * *

## செல்லி

பொம்பளையா இவ! பஜாரி! கிணற்றுக்கு வந்தாப்போதும், ஒரே ஆர்ப்பாட்டம். ஒரு சொல்லுச்சொல்வதற்குள்ளே, ஓஹோன்னு கூவிக்கொண்டு, சண்டைக்குக் கிளம்பி விடுகிறா. ஒரு காரணமும் இல்லாவிட்டாக்கூட, சண்டை போடுகிறா. அப்பாப்பா! என்னென்னதான் பேசறா தெரியுமா! சபிச்சிக் கொட்றா! வாயிலேவாரத் தகாத பேச்செல்லாம், பேசுவா. பேச்சோடு விடுகிறாளா! குடத்தாலே இடிப்பா, கூந்தலைப்பிடித்து இழுக்கிறா, சில சமயம் அடிக்கவே வந்துவிடுகிறா. அடங்காப்பிடாரி! வம்புச் சண்டைக்காரி! வாய்க்கொழுப்புக்காரி. அவ கிணற்றண்டை வருகிறான்னு தெரிந்தாலே, நான் போக மாட்டேன், செ! அந்த வாயாடி, போக்கிரிக் கழுதை போய்த் தொலைக் கட்டுமனு, வீட்டிலே இருப்பது. அப்பா! நானும் எத்தனையோ பொம்பளைகளைப் பார்த்தேண்டியம்மா, இவளைப்போல், பஜாரியைக் கண்டதில்லை. சனியன்! ஒழியுதாம், புருஷன் வீட்டுக்கு, நாளைக்கு, போய்த் தொலைக்கட்டும். நம்ம ஊர் க்ஷேமப்படும். கிணற்றுப்பக்கம், தாராளமாகப் போய்வரலாம் இனி.

* * *

பரமசாது என்று எஜமானரால் பாராட்டப்பட்ட தோட்டக்காரனே தான், 'நின்னா உதை குனிந்தா குத்து, கொடுக்கும் கணவன்!

அந்தக் கணவனுடைய கோணல் சேட்டைகளைப் பொறுத்துக்கொண்டு, 'பூமாதேவியைவிடச்சாது'வாக இருக்கும் பொட்டைக்கண்ணிதான், கிணற்றருகே போனால் வாயாடி வம்புச்சண்டை பிடிக்கும் பஜாரி!

பரமசாது, கொடிய கணவனாவதும், அடக்கமானமனைவி அடங்காப் பிடாரியானதும், ஏன்?

எஜமானரிடம் அவன் படும், கொடுமைகள், அந்தப்பரமசாதுவின் மனதிலே கிளப்பிவிடும் கோபம் இருக்கிறதே, அங்கு அவர் எதிரே அடங்கிக்கிடக்கிறது, வீட்டில், அபலையின் முன்னே, வெளிவருகிறது—பரமசாது, கோபம் தலைக்கேறிய கொடியவனாகிறான்.

அவனுடைய கொடுமைகளைச் சகித்துக்கொண்டு, பரமசாதுவாகப், பொறுமைசாலியாக இருக்கும் அந்த மனைவியின் மனதிலே, அந்தச் சமயங்களிலே, மூண்டுவரும் கோபம், அப்போது அடங்கிக் கிடக்கிறது, புற்றுக்குள் இருக்கும் பாம்புபோல. தாய் வீட்டில், கிணற்றருகே, வேறு பெண்கள் எதிரே, அந்தப் பாம்பு, படமெடுத்தாடுகிறது, அப்போது, பரமசாது, பஜாரியாகிறாள்!

வேலை செய்யுமிடத்திலே சாது! வீட்டிலே கோபக்காரன்!

புருஷன் எதிரிலே பொறுமைசாலி, அவளே பிறகு பஜாரி, வேறு பெண்கள் எதிரில்!

சேலம் 'ஒகயனக்கல்' அருகே, ஆடு தாண்டும் அளவுள்ள காவேரி, பிறகு அகண்ட காவேரியாகிறதே [illegible]று ஜில்லாவில். அதுபோல. இடபேதம், இயல்பு பேதத்துக்குள்ள பல காரணங்களிலே ஒன்று. ஒரு இடத்திலே, கோபத்தைக் காட்ட முடிவதில்லை, ஆனால், கோபமே ஏற்படவில்லை என்று பொருள் அல்ல. அது பிறகு, கொதித்துக் கிளம்புகிறது வேறோர் இடத்தில.

தோட்டக்காரன் பரமசாதுவாகத் தான் இருந்து தீரவேண்டி, நேரிடுகிறது. இடம் அப்படி.

பொட்டைக்கண்ணி, பொறுமைசாலியாகத்தான் இருக்கவேண்டி நேரிடுகிறது—புருஷன் எதிரில்.

வீட்டில் அவன், தன் கோபத்தைக் காட்ட முடிகிறது தாராளமாக—ஆகவே, வேலைசெய்யு மிடத்திலே, கட்டிப் போடப்பட்டிருந்த கோபம், கட்டுகளை அறுத்துக்

கொண்டு, காட்டுமிருகம் போலாக்கி விடுகிறது, பரமசாதுவை. அவள் நிலையும் அதுதான், தாய் வீட்டிலே, கிணற்றருகே, புருஷன் இல்லாத இடத்திலே.

அவர்கள் மட்டுந்தானா! நாம்? எத்தனையோ, சம்பவம், இப்போது நினைவிற்குக் கொண்டுவந்தால், தெரியும்—பரமசாதுவாக இருப்போம் சில சமயம், கோபம் கொப்பளித்தெழும் சில சமயம்—இடபேதம் இயல்பைப் பேதப்படுத்தி இருக்கும். உளப் பண்பின் நுட்பமறிந்தவர்கள், கூறுகின்றனர், ஒரு சமயத்தில், எக்காரணம் கொண்டோ, ஏதோ ஓரிடத்தில், மூண்டு இடபேதம் காரணமாக அடக்கப்பட்ட, உணர்ச்சி, (கோபம் மட்டுமல்ல, எந்த உணர்ச்சியுமே) வேறோர் சமயம், வேறோர் இடத்தில், பல மடங்கு, வேகத்துடனும் அளவிலும் வெளிப்படும் என்று. குட்டிகளுக்கு அன்போடு பால் கொடுக்காமலா இருக்கிறது பெண்புலி! மானைப் பிடித்துக் கொன்று இரத்தத்தைப் பெண்புலி குடிக்கும்போது எப்படி இருக்கிறது!! மக்களும் அப்படித தான். எனவேதான், பரசுராமன் சாது, பாண்டுரங்கம் கோபக்காரன், பார்வதி போக்கிரி, பரிமளா சரசி, என்று, பொதுவாகக் கூறிவிடுவது, முழு உண்மையாகி விடாது, என்று உளப்பண்புணர்ந்தோர் கூறுகின்றனர்.

* * *

## புது சம்பவம்

ஏண்டா தடிக் கழுதே! ஏது, கோபம், பிரமாதமாக வருதோ?

கோபம், வராதாய்யா! நான் என்ன மாடா, மனுஷனா? எவ்வளவு உழைத்தாலும், உள்ளன்போடே நடந்தாலும், உனக்கு ஒரு துளி ஈவு இரக்கம் ஏற்படுதா? நாயைப் பேசுகிறாப்போலே பேசினா, நானும், மனஷன்தானே, கோபம், வராமலா இருக்கும்?

உதைத்தாத் தெரியும், ராஸ்கல்.

சும்மா, இருங்க. உங்களிடம் வேலை செய்ய வந்திருக்கிறனே தவிர, உதை வாங்க அல்ல. மனஷாளை மனுஷாளுங்க, அடிக்கிறதும் உதைக்கிறதும், தகாதுங்க — பொறுத்துக்கொள்ள வேணும்னு அவசியம் ஒண்ணும் கிடையாதுங்க. மாட்டை அடிச்சாக்கூட, அது முட்ட வரும், மனஷன் சும்மா இருக்கவேணும்னு, சொன்னா, சரிங்களா?

டே! நீயா இப்படிப் பேசறே. ஏண்டா? இதெல்லாம், யாரிட்ட போதனை? ஏண்டா! மறுத்து ஒரு பேச்சுப் பேசமாட்டே—அவ்வளவு அடக்க ஒடுக்கமா, சாதுவாக இருந்தவன், இப்படி, ஒரு சொல் சொல்லாத முன்பு, கோபம் தலைக்கு ஏறி, கொக்கரிக்கிறயே, என்னடா சங்கதி?

* * *

## அந்தச் சங்கதி இது.

இருப்பது இதுதான்.

என்ன கழுதே! கேட்டா, இது தானுனு, கத்தறே. எனக்கு வெண்டைக்கா பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாதா கழுதே!

தா! சும்மா கழுதே மேய்க்காதே! ...........

அடி, நாயே! என்னடி என்னமோ எதிர்த்து எதிர்த்துப் பேசறே.

உள்ளதைச் சொன்னா, எதிர்க்கிறதுன்னு பேரா? நீ, காரணமில்லாமே, கண்டபடி பேசுவே, கல்லா, நானு? காலமெல்லாம் இந்தக் கதி தானா எனக்கு? உன் மனசு என்ன, இரும்பா!

அடடே! உபதேசம்செய்யக்கத்து கிட்டாயா? கழுதே!

மறுபடியும், மறுபடியும்........

சொன்னா, என்னவாம்! பதில் பேசினே, உதைதான்....

உதைச்சித்தான் பாரேன்.

உதைச்சித்தான், பாரேன்....

* * *

எழுந்தான், உதைத்தான் — ஆனால் அவன்தான் வீழ்ந்தான். பொட்டைக்கண்ணி, அந்தக் காலைப் பலமாகப் பிடித்து ஒரு பக்கம் திருப்பிவிட்டாள்.

அதுதான், நடந்த சங்கதி. அவனைச் சிந்திக்க வைத்தது. நெடுநேரம் யோசித்தான் — பலப் பல—புதுப் புது விதமாக யோசனை உதித்தது. புது ஆளானான்.

வேலாயுதத்துக்கு, அந்தச் சங்கதியும், அதன் சூட்சமமும் தெரியாது. அவன் ஆச்சரியப்பட்டான், பரம சாது, ஏன் இப்படி எதிர்த்துப் பேசுகிறான் என்று.

* * * *

சரி! வாயை மூடிடி, உனக்குத்தான் பேசத்தெரியும்னு எண்ணமா?

பேசண்டி, பேசு. பேயாட்டம் ஆடண்டி ஆடு.

சரி, கிடடி கழுதே முண்டே, யாருடி கழுதே!

நீ, தாண்டி நாயே!

* * *

கிணற்றங்கரை அமளி! பொட்டைக்கண்ணியின் ஏகசக்ராதிபத்யம், உடைந்தது, செல்லியின் எதிர்ப்பால். உடைந்தது மட்டுமல்ல,

பொட்டைக்கண்ணிக்கும் புதுப் புது எண்ணம் உதித்தது. அதன் விளைவுதான். புருஷனிடம் அவள், எதிர்த்துப் பேசியது. அதன் பலன் தான், அவள் கணவன் தன் சர்வாதிகாரம் சரியக் கண்டது. அதன் தொடர்ச்சிதான்,வேலாயுதம்,பழையபடி தோட்டக்காரனை எவ்வளவு கண்டித்தாலும், அவன் பரமசாதுவாக இருப்பது இனி நடைபெறாது என்பதைத் தெரிந்துகொண்டது.

வேலாயுதமும், சிந்திக்கலானான், தோட்டக்காரனைப் போலவே, பொட்டைக்கண்ணி,போலவே. அவனும் அவர்களைப் போலவே, முறையையும் இயல்பையும் மாற்றிக் கொண்டான். முன்கோபம் இல்லை.

அதோ பேசுகிறான், கேளுங்கள்.

"ஏண்டாப்பா,.............அடா புடான்னு கூப்பிடுவானேன் .... .... துரைசாமி! தோட்டத்துக்குத் தண்ணி பூரா பாய்ச்சியாச்சா?"

"ஆச்சிங்க"

"அப்பொ,வீட்டுக்கு போய்ட்டு, வாப்பா."

* * *

"குழம்பிலே, உப்பு குறைவு குப்பி"

"ஆமாங்க. கவனிக்கலே"

"கொஞ்சம் போடு"

"அதோ மேல்சட்டியிலே இருக்கு பாரு; எடுத்துப் போட்டுக்கோ.

(14-ம் பக்கம் பார்க்க)

# ★ முரசு ஒலித்தது ★

—※—

"பாடகர், கட்டை சாரீரம், தாளம் தகரறு; பாடாந்திரம் சரியில்லை."

அட் இழவே! அப்படிப்பட்ட ஆசாமியா? என்னசெய்தீர்? போதும் ஸ்வாமி உம்மபாட்டு, எழுந்து போம் என்றீரா?"

"இல்லை! பாடித்தொலைத்தான், கேட்டுத்தொலைத்தேன்; வேறே என்னசெய்வது? நமக்கு அத்தகைய பாடகன்தான் கிடைத்தான்"

* * *

"புளிக்கும் போலிருக்கிறதே! வெறும் நாராக இருக்குமோ? நான் மல்கோவா கேட்டால், நீ இந்த நாட்டுச் சனியனைக் கொண்டுவந்தாயே, இதனைத் தின்றால் வயிற்றை வலிக்கும், ரொம்பச் சூடு உண்டாக்குமே. இந்த உபயோகமற்ற பழத்துக்காக, இவ்வளவு நேரம் காத்திருக்க வைத்தாய். எப்படி இந்தப்பழத்தைச் சாப்பிட்டுத் தொலைப்பது"

"ஐயா! இருக்கிற பழம் இது' வேறே கிடையாது. மல்கோவாவும் நீலமும் ஏது இப்போது? கொஞ்சம் புளிப்பாகத்தான் இருக்கும், வேண்டுமா, வேண்டாமா? "

"சரி, சரி, இதையும் தூக்கிக் கொண்டுபோய்விடாதே. ஒரு அரை டஜன் கொடு. என்ன செய்வது? நல்லபழம் கிடைக்குமென்று பார்த்தேன். கிடைத்ததை விடுவானேன், கொடு"

* * *

"மாநிறம் இருக்குமோ?"

"உம்மிடம் புளுகு பேசுவானேன், பெண் கொஞ்சம் கறுப்புத்தான்."

"வயது............?"

" இருபத்து ஒன்று "

"வயதும் அதிகம். போகட்டும். வாயாடி இல்லையே, பெண்? "

"ஊமை அல்ல, அவ்வளவுதான் தீர்மானமாகச் சொல்ல முடியும்"

"வம்புக்காரி அல்ல?"

"தானாகப் போகாது?"

"ஒரே பெண்ணோ?"

"மூன்று! இரண்டு தம்பிமாரும் உண்டு. வீணு கவளர்த்தாதீர், பெண், பிரமாதமான அழகு என்று சொல்ல முடியாது, என்னமோ இருக்கு ஒரு மாதிரியாக, கோரம்னு சொல்ல மாட்டா யாரும், மேனும் நல்ல சேலை யுடுத்தி நகைநட்டுப்போட்டா, நன்னு இருக்காமே போகுமா? உமக்குச் சம்மதமான்னு சொல்லும், ஏன்னு, வேறே இடம் இருக்கு,........"

"திருப்திகரமாகத் தோணலை. பையன் ராஜா போல இருப்பான். அழகான பெண்ணாகக் கிடைக்கணும்னுதான் பையனுடைய அம்மாவுக்கு இஷ்டம். நேக்கும்தான், ஆனு ............"

"ஓய்! விஷயத்தைச் சொல்லி விட்டேன். பன்னிப்பன்னி பேசாதேயும். பெண், பிடிக்கல்லேன்னு சொல்லிவிடும்"

"பெண் பிடிக்கத்தான் இல்லை, இருந்தாலும், என்ன செய்வது, இந்தச் சந்தர்ப்பத்திலே ஒரே பிடிவாதமாய்ப் பேசறது அழகல்ல, சரி, போறது, என்னமோ நாம் ஒண்ணு நினைச்சோம், வேறே ஒண்ணு வந்து முடியறது. எல்லாம் பையனுடைய ஜாதக பலன். முடிச்சிவிடும் அந்தப் பெண்ணையே. நாள் குறித்துவிடும், என்ன செய்யறது! பெண் பேரு என்ன சொன்னீர?"

"வன்னின்,னு பேர்."

"பெயராவது அழகா இருக்கப் படாதோ, சரி, போறது, முகூர்த்தப் பத்திரிகையிலே வனஜான்னு போடறது, வேறே என்ன செய்யறது, கொடுத்து வைத்தது அவ்வளவு தான்."

* * *

"சார்! மானேஜர் இருக்காரா?"

" இல்லை"

"ஹெட் கிளார்க் இருக்காரா, சார்?"

"அவர் வர, நேரமாகும்"

"கிளார்க் கந்தசாமி?"

"லீவ்லே போயிருக்கார்"

"ப்யூன் பொன்னுசாமி வரவில்லையா சார்!"

"ஜுரம்! அவனுக்குப் பதிலாகத்தான் நான் வேலை பார்க்கிறேன்"

"சரிதான் சார், ஒரு காரியமாக வந்தேன், மானேஜரைக் காணோம், உங்களிடமேதான் சொல்லிவிட்டுப் போகலாம்னு நினைக்கிறேன்."

"மானேஜரைப், பார்க்க வந்தவர், யாரையோ கேட்டுவிட்டு, என்னிடம் சொல்கிறேன்னு சொன்னு ஆச்சரியமா இருக்கே"

"என்னசார் செய்யறது! நான் தேடி வந்தவர்கள் யாரையும் காணோம். நீங்கதான் கிடைச்சீர்கள், உங்களையும் விட்டு விட்டா எப்படி, இதோ, இந்தக் கடிதத்தை........"

"என்ன கடிதம்?"

"அப்ளிகேஷன் பாரம் சார், ஒரு 300 ரூபா கடன் வேணும், அதற்காக, கடன் மனு"

"இதை நீட்டத்தானு, மானேஜரைக் கேட்டே. "

"அவர் கிடைக்காவிட்டா என்ன சார், நீங்கதான், இதை வாங்கி வையுங்களேன்."

* * *

இவ்வண்ணம், சம்பவங்கள் நேரிடுவதுண்டு. எதிர்பார்ப்பது ஒன்று, கிடைப்பதோ வேறொன்று, எனினும், என்ன செய்வதென்று, கிடைத்த வரையில்சரி, திருப்தி அடைவோம், என்று, பொறுத்துக் கொள்வதுண்டு. தனிப்பட்டவர்களின், தேவைகளிலே, இப்படி எதிர்பார்ப்பது கிடைக்காமல், ஏதோவொன்று கிடைத்தாலும், அதிகமான கேடு இல்லை—அவர்களின் சொந்த 'ஆசாபாசங்களை' மட்டிலுமே அது பொறுத்த விஷயமாதலால். நாட்டுக்குப் பொதுவான பிரச்னையிலே, 'எதுவோ ஒன்று—கிடைத்தது இதுதான்-என்னசெய்வது—அகப்பட்ட வரையில் சரி' என்று எண்ணுவது, கூடாது.

அந்த முறையிலே, இந்திய அரசியலைப் புதிதாகத் தீட்டும் பெரிய பொறுப்பை மேற்கொண்டு பணி

(13-ம் பக்கத்தில்)

# கேள்வியும் பதிலும்

—*—

**1 பிறதேசத்தார் ஒரு கடவுளை வழிபடுகின்றனரே, நாம் ஏன் வழிபடக் கூடாது? மேனாட்டினர் நாகரீகமடைந்தும், விஞ்ஞான அறிவு நிரம்பியும் கடவுளை வழிபடும்போது நாம் ஏன் கடவுளை வழிபடக் கூடாது?**

'ஒருகடவுள்'—வழிபாடு, கூடாது என்று, திராவிடர் கழகம், எப்போதும் சொன்னதில்லை. பல தெய்வங்கள் கொண்ட, கடவுட் கொள்கையையும், அதனை நிலைநாட்ட ஏற்பட்ட புராண இதிகாசங்களையும், அவைகளை ஒட்டி ஏற்பட்ட மூட நம்பிக்கைகள் மிகுந்த பழக்கவழக்கங்களையும், இவைகளை ஆதாரமாகக் கொண்டு, ஒரு பூஜாரிக் கூட்டம் மக்களை ஆட்டிப் படைப்பதையும், இதற்கு அஞ்சி தங்கள் செல்வத்தையும், சிந்தனையையும், பாழாக்கிக் கொள்ளும், மக்கள் போக்கையுமே, திராவிடர்கழகம் கண்டிக்கிறது, திராவிடர்கழகத் திட்டத்திலோ சுயமரியாதை இயக்கத் திட்டத்திலோ ஒரு கடவுள் உணர்ச்சியும், வழிபாடும் கூடாதென்று குறிப்புக் கிடையாது. அங்கத்தினர் சேர்க்கும் சீட்டுகளிலும் கிடையாது. நான் மேலே குறிப்பிட்ட விஷயங்களைப் பற்றிச் சுயமரியாதைக் கட்சி கண்டித்துப் பேசிக்கொண்டு வந்தபோது ஆஸ்திகக்காரர்கள், பொதுமக்கள் மனதிலே தப்பபிப்பிராயத்தைப் புகுத்தி, சுயமரியாதை இயக்கத்தின் மீது வெறுப்பு ஏற்படச்செய்வதற்காகச் சுயமரியாதைக்காரர்கள் கடவுள் வழிபாடு கூடாது என்பவர்கள்—நாஸ்திகர்கள் என்றெல்லாம், கட்டிவிட்டனர். அந்தப், பழிச்சொல் ஆழ[illegible]வேகமாகவும் பரவினதால், போது[illegible] பலர், நம்பினர். இப்போது, இந்த தப்பபிப்பிராயம், வேகமாகக் குறைந்து வருகிறது.

**2- தேர்திருவிழா, பண்டிகை, இவை ஏன் கொண்டாடக் கூடாது?**

ஏன் கொண்டாடவேண்டும்? பக்திக்காகவா? ஆம் என்றால் அதற்கு, வழிபாடும், தியானமும் போதுமே! ஒழுக்கத்துக்காகவா? ஒழுக்கம், இவைகளால் கெடுகிறதேயொழிய வளருவதில்லையே. தேர்திருவிழா பண்டிகையாகியவைகள், காட்டுமிராண்டிக் காலத்திலே மக்களின் மனதிலே புத்தறிவு தோன்றாத முன்பு இருந்துவந்த நம்பிக்கைகளின் பேரால் உள்ளவை. இந்த நம்பிக்கைகள், இன்று, இல்லை, கூடாது, அறிஞர்கள் ஒதுக்கியும் விட்டனர். இந்நிலையில், மீண்டும்மீண்டும், அந்தத் தேர் திருவிழாக்கள் பண்டிகைகள் ஆகியவற்றைக் கொண்டாடுவதால், அந்தப்பழய நம்பிக்கைகளை, தலைதூக்க விடுகிறோம், இது கூடாது என்பதற்காகவே அவை கூடாது என்கிறோம். மேலும், ஏழ்மை மிகுந்து, அவசியமாகச் செய்யப்படவேண்டிய பல காரியங்களுக்குப் பணம் இல்லை என்று திண்டாடும் நமது நாட்டில், பணத்தைவாரி இறைத்து, பாழாக்குவது சரியல்ல. ஆகவேதான் இவை கூடாது என்கிறோம்.

**3 ஹைதராபாத் சமஸ்தானத்தைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?**

நிஜாம், நிச்சயமாக, மக்களாட்சி தரத்தான் வேண்டும். அந்தச் சமஸ்தானத்தில் பெரும்பான்மையோர் முஸ்லீம் அல்லாதாராக இருக்கிறார்கள்— ஜனநாயக முறைப்படி ஆட்சி அமைவது என்றால், அங்கு முஸ்லீம்களுக்கு ஆட்சியில், இப்போதிருப்பது போல ஆதிக்கம் இருக்காது—இருப்பதும் கூடாது. ஹைதராபாதில் பொறுப்பாட்சி வேண்டுமென்ற கிளர்ச்சி நியாயமானதுதான். அதை ஆதரிக்கிறோம். அதுபோலவே, சமஸ்தானம், எந்த டொமினியனில் சேருவது, என்பதும், மன்னரின் விருப்பத்தின்படி விடப்படாமல், மக்கள் விருப்பத்தின்படிதான் விடப்படவேண்டும் என்கிறோம்.

**4 திராவிடநாடு தனிநாடானால் சிறிய நாடு என்ற காரணத்தால், ஐக்யதேச சங்கத்தில் மதிப்புப் பெறமுடியாதல்லவா?**

அந்தப்பயமே வேண்டாம். ஐக்யநாடுகள் சபையிலே பெரிய அமெரிக்காவுக்கு உள்ள மதிப்பும் செல்வாக்கும், சிறிய இங்கிலாந்துக்கு இருக்கிறது, பெரிய சைனாவுக்கு, சிறிய பிரான்சுக்கு உள்ள அளவு மதிப்பு இல்லை, பெரிய இந்தியாவையும், அதைவிடச் சிறிய பாகிஸ்தானையும் சமமாகவே நடத்துகின்றனர். அங்கும், எங்கும் ஒருநாடு பெரிதாக இருக்கிறது என்பதற்காக, மதிப்பும் செல்வாக்கும் வந்துவிடாது; திராவிடநாடும், அவ்வளவு, சிறிய நாடுஅல்ல. ஐரோப்பியகண்டத்திலே உள்ள எத்தனையோ நாடுகளைவிடப், பலமடங்கு பெரிதாக இருக்கும். எந்தநாட்டுக்கும், அதனுடைய, தொழில் வளம், அறிவு வளம், இதைப்பொறுத்துத் தான் மதிப்பும் செல்வாக்கும், ஏற்படுமேயொழிய, அளவைப் பொறுத்து அல்ல. இத்துடன் ஐக்யநாடுகள் சபையிலே, மதிப்பும் செல்வாக்கும், பெறுவது என்பது, இப்போது உள்ளது போலவே, எப்போதும் 'வேண்டப்படும்' கொள்கையாக இருக்குமா என்பதும் சந்தேகம். சர்வதேச சங்கம் என்று, முன்பு இருந்து, மறைந்து போன சங்கத்தை நண்பருக்கு நினைவூட்டுகிறோம்.

**5 ஒரு கடவுள் உணர்ச்சிதான் இருக்க வேண்டும். சாதிகள் கூடாது. என்பன போன்ற திட்டங்களைப், பேசிக்கொண்டிருப்பதைவிட, சட்டசபைகளைக் கைப்பற்றிச் சட்டங்களாக்கலாமே? ஏன் பிரசாரம் செய்தபடியே இருக்க வேண்டும்?**

சட்டசபைக்குச் சென்று செய்யக்கூடிய காரியங்கள் இன்னின்னவை என்று மக்கள் அறியும்படியும், மக்கள் இவை செய்யப்பட வேண்டியவைதான் என்று உணர்ந்து, ஆதரவும் அனுமதியும் தரவும், நிலைமை ஏற்பட வேண்டுமே, அதற்குத் தான் பிரசாரம்: நாம் என்ன செய்ய எண்ணுகிறோம், நமது திட்டமென்ன என்பதை எடுத்துக் கூறி 'ஓட்' தரும்படி கேட்பதுதான் ஜனநாயக முறை. எதையோ சொல்லி, 'ஓட்' வாங்கிக் கொண்டு, சென்று, சட்டசபையிலே உட்கார்ந்தான பிறகு, எங்கள் திட்டம் இது என்று திடீர் வேட்டுவிடுவது, சரியுமல்ல, வெற்றியும் தராது. சட்டம் செய்வதற்கு முன்பு, மக்கள் மனதிலே, மாறுதலை ஏற்படுத்த வேண்டும்— அத்தகைய சட்டங்கள் தேவை என்பதை அவர்கள் உணரவேண்டும்—அந்தக்காலம் வரை, சட்டசபை செல்வது பலன் தராது. அந்தச் சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டு, மக்களின் அனுமதியைப்பெற்று, சட்டசபை சென்று, மேற்படி திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்பதுதான் கழகத்தின் வேலைத் திட்டம்.

**6 நீர் கலையின் பேரால் காசு திரட்டுவது சரியா?**

நண்பருக்குக், கலையினிடம் உள்ள ஆர்வமும் அன்பும், கலைத்துறையில் ஈடுபட்ட அனைவருக்கும் தோன்றி, டிக்கட் இல்லாத சினிமா, கட்டணமில்லாத நாடகம், நடத்தப்படும் போது, நான் நிச்சயமாகப் பணம் வாங்காமல் கதை எழுதித் தருவேன்; சம்மதம். நண்பர், அத்தகைய சினிமா, நாடகங்கள் ஏற்படப் பாடுபடட்டும்.

—

## அனுதாபம்.

சுயமரியாதைப் பற்று மிகக் கொண்டு, தன்னலமற்றுப் பணிபுரிந்து, இன்சொலால் எவரையும் தன் வயப்படுத்தும் இயல்புடன் விளங்கிய, காஞ்சிபுரம் தோழர் M. ஏழுமலை என்பவர் தமது இள வயதில், சென்ற கிழமை காலமானார் எனும் மனம் நோகும் செய்தியைக் கேட்டு, வருந்துகிறோம். வைதீகப் பற்றுடைய தகப்பனார் ஒரு புறம், தீவிர நோக்கமுடைய நண்பர்கள் மற்றோர் புறம், இடையே அந்த நண்பர் நின்று, மிகமிகப் பக்குவமாகப் பணிபுரிந்து வந்தார். எதனையும் முறைப்படி செய்ய வேண்டுமென்பதிலே மிகுந்த அக்கரை கொண்டவர். நல்ல தமிழ்பற்று அப்பழுக்கற்ற நடவடிக்கை கொண்டவர். அத்தகைய தோழரின் மறைவு, காஞ்சீபுரம் திராவிட இயக்கத்தினருக்கு மிகப் பெரு நஷ்டம். அவருடைய பெற்றோருக்கும், துணைவியாருக்கும், நமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

திராவிட நாடு

காஞ்சி] 16-11-47 [ஞாயிறு

# "தன்னாலே வரும்!"

## புதிய தாரகம்!!

●

மராட்டியம்
கர்நாடகம்
ஆந்திரம்
கேரளம்
தமிழகம்

ஆகிய 5 மொழிவழி மாகாணங்களும் அமைக்கப்பட வேண்டும். அதற்கு எந்தெந்தப்பகுதிகள், எங்கெங்கிருந்து பிரிக்கப்பட்டு, எதெதனுடன் இணைக்கப்பட வேண்டும், என்பது பற்றிய திட்டம் தீட்ட வேண்டும். எல்லையை நிர்ணயிக்க, கமிஷன்கள் நிறுவப்பட வேண்டும்—என்ற தீர்மானம், நவம்பர் 27-ந் தேதியன்று அரசியல் நிர்ணயசபையின் சட்டசபை நடவடிக்கைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட இருக்கிறது.

இதிலே உள்ள சிக்கல், பல. கர்நாடக அமைப்பும் மராட்டிய அமைப்பும் மட்டற்றசிக்கலைக் கிளப்பிவிடக் கூடியவை.

ஆந்திர அமைப்பிலே, சிக்கல், அர்த்தமற்ற ஆவல் காரணமாக ஆந்திரரே ஏற்படுத்திக் கொள்ளலாமே யொழிய, இயற்கையான சிக்கல் இல்லை.

சென்னை நகரைக்கேட்கும் சிறுமதி'—சிக்கலை உண்டாக்குகிறதே யொழிய, மற்ற வகையிலே, ஆந்திர அமைப்புக்குத் தடை இல்லை.

கர்நாடக அமைப்புக்கு, பம்பாய் மாகாணத்தாருக்குப் பெருநோக்கம் ஏற்படவேண்டும்.

எல்லாவற்றையும்விட, மராட்டிய மண்டல அமைப்புக்குத்தான் அதிக சிக்கல் இருக்கிறது.

பம்பாய் மாகாணத்திலுள்ள மராட்டி மொழிபேசும் மாவட்டங்கள், மத்திய மாகாணம், பேரார் ஆகிய இடங்களிலே, மராட்டி பேசுவோர் பெருவாரியாக உள்ள பகுதிகள், இவைகளைக் கொண்டதாக, மராட்டிய மண்டலம் அமைக்க வேண்டுமென்பது திட்டம்.

இப்போது, பம்பாய் மாகாணத்திலுள்ள, குஜராத், விரும்பினால், மராட்டிய மண்டலத்திலே இணைய அனுமதிக்கப்படலாம்.

எல்லைகளை நிர்ணயிக்க, கமிஷன்கள், ஏற்படுத்த வேண்டும் என்று, தீர்மானம் [illegible] பான பிறகு, இதற்கான [illegible]கள் கூறவும், ஆதாரம் காட்ட[illegible] ஆதரவு திரட்டவுமான, [illegible]தும்.

மொழிவழி மாகாணங்கள் அமைப்பது, [illegible] அளவில் எல்லோரும் ஏற்றுக்கொண்டு விட்டனர்.

ஆனால், பிரிட்டிஷார், தங்கள் பிடியைப் பலப்படுத்திய போது, ஏற்படுத்திய நிர்வாகத் திட்டங்களின் விளைவாகப், பலசிக்கல்கள் உள்ளன.

நிர்வாகம், ராணுவ அலுவல் இரண்டையும் முக்கியமாகக்கருதி, பிரிட்டிஷார், 'வெட்டு ஒட்டு' வேலையை அதிகமாகச் செய்து விட்டனர். எனவேதான், ஒரேமாகாணத்திலே, பலமொழியினர், குழுமி இருக்கும் நிலை ஏற்பட்டது.

பம்பாய் மாகாணம், என்னமொழி கொண்டது? என்றால், திட்டவட்டமாகக் கூறமுடியாது.

குஜராத், இந்தி, மராட்டி, (சில ஆண்டுகளுக்கு முன்பு வரையில் சிந்தி,)—இவ்வளவு மொழியினரும் ஒரே மாகாணத்திலேஇருக்கிறார்கள்.

எனவேதான் இப்போது, மொழிவழி மாகாணங்கள் அமைக்கும் போது, ஒவ்வொரு மாகாணமும், கொஞ்சம் இடத்தை இழக்கவோ புதிதாகப் பெறவோவேண்டி ஏற்படுகிறது. ஆனால், மொத்தநன்மையைக் கவனித்தால், மொழிவழி இடங்களை அமைத்து விடுவதால் கிடைக்கும் நன்மையைப் பெறுவதற்காகச், சில இடங்களை ஆளும் உரிமையைவிட்டு விடுவதே நல்லதென்று தோன்றும்.

பம்பாய் மாகாணத்துடன், சிந்துவும், சென்னையுடன் ஒரிசாவும், வங்கத்துடன் அசாமும், பஞ்சாபுடன் எல்லையும், ஒருகாலத்தில் பிணைக்கப்பட்டு இருந்தது.

அதனால், ஏகாதிபத்யத்துக்கு ராணுவ நடவடிக்கைக்கு ஏற்பட்ட அளவு வசதி, மக்களின் நல்லாட்சிக்கு ஏற்பட முடியாது போயிற்று. எனவே, சில ஆண்டுகளுக்கு முன்பு, இந்த இணைப்புகள் உடைக்கப்பட்டு, புது மாகாணங்கள் உருவாக்கப்பட்டன.

இன்னும், சில சிக்கல்கள் இருப்பதற்குக்காரணமும், முன்பு பிரிட்டிஷார் கையாண்ட 'வெட்டு ஒட்டு' வேலைதான்.

ஆனால், நல்லெண்ணத்துடனும், நிதான புத்தியுடனும், நடந்துகொண்டால் இந்தச் சிக்குகளைச் சுலபத்தில் நீக்கிவிடமுடியும். இடம் அதிகம் வேண்டும் என்ற மண்ணாசை கொள்ளாது, ஒரே மொழியினர், ஓரிடத்தில், ஓராட்சியிலே இருப்பதே, நலன்பயக்கும் என்ற நோக்கம் கொண்டுவிட்டால், சிக்கல் ஏற்படாது.

எல்லைத் தகராறுகளும், இடவேட்டையும், சிலபல சிக்கல்களை உண்டாக்கினாலும், அவை, தீர்க்கப்பட்டுவிடும் என்பதிலே, சந்தேகம் இல்லை. ஆனால், சென்னை தமிழரசுக் கழக மாநாட்டிலே, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜர் கூறியது போல, "தானாகவந்துவிடும்" என்று எண்ணிக்கொண்டு, 'உரிமைகளை' வற்புறுத்தாமலோ, மற்றவர்கள் மனம்போன போக்கில் நடக்கவிடுவதோ கூடாது. எனவே, சென்னை நகர், தமக்கு என்று, ஆர்ப்பாட்டக் குரலிலே ஆந்திரர் கூறியானது கேட்டும், 'தன்னாலே வரும்' என்று கூறுவது, தட்டிக்கழிக்கும் போக்கு ஆகும் என்கிறோம்.

ஆனால் காமராஜருக்குள்ளது போன்ற அளவு கவலைபற்றதன்மை, அனைவருக்கும் இருந்தாக வேண்டுமென்பதில்லை. அவருக்கு, யார் எது கேட்பினும், எத்தகைய கிளர்ச்சி தோன்றினாலும், 'குழப்பம்' என்று தான் தோன்றும். "ஏன் இருக்கிற குழப்பம் போதாதென்று இது வேறு குழப்பம்? இதெல்லாம், சர்க்காரைப் பலவீனப்படுத்தும்" என்றார்.

தொழிலாளர், தங்கள் நிலை உயர வேண்டுமென்று கேட்டால்—"தன்னாலே உயரும்-இதற்காக நீங்கள் வேறு தகராறு கிளப்பாதீர்கள்—குழப்பம் வேண்டாம்—சர்க்கார் பலவீனப்படும்"—என்கிறார்.

உழவர், காய்ந்தவயிறும் பச்சை வயலும், பொருத்தமல்லய்யா, எமது இருண்டவாழ்விலே கொஞ்சம் வசதி வரச் செய்யுங்கள்" என்று கேட்டால், "தன்னாலே வரும்!" என்கிறார்.

"சமதர்மம் வேண்டும்"-"சொல்லாதே—கேட்காதே— குழப்பாதே-

தன்னாலே வரும்!"

"சென்னை, ஆந்திரருக்குச் சொந்தம் என்கிறார்களே — நியாயமா — தமிழருக்கு வேண்டாமா?"-"தன்னாலே வரும்"!

"திருவாங்கூர் சமஸ்தானத்திலே, பல இலட்சம் தமிழர்கள் தினறுகிறார்களே, உரிமை இழந்து, நியாயமா? அவர்களைக் கவனிக்கவேண்டாமா? அந்தப் பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டாமா?"- "அதுவும் தன்னாலே நடக்கும்-தகராறு கிளப்பாதீர்கள்"-என்று எதற்கும், புதியதோர் 'தாரகம்' கண்டு பிடித்துக் கொண்டார் காமராஜர்.

தன்னாலே வரும், இதைக்கூற, காமராஜர் தேவையா! — ஆலமரத் தடியிலே மேல்வேட்டியை மடித்துப்போட்டுக், காசுபோடச் சொல்லி, ஆருடம் கூறும் பேர்வழிகள் கூடச் சொல்வரே "தன்னாலே வரும்!" என்பதை.

சிக்கல்கள், உள்ளன. அவைகளை மறைப்பது அழகல்ல.

தமிழரசுக் கழகத்தாருக்கு, "தன்னாலே வரும்",—என்று கூறுகிறார், திராவிடர் கழகத்தாருக்கு, "சொன்னாலே கோபம் வருகுது" என்கிறார்- இப்படி, எந்தக் கழகமும் இருக்கக்கூடாது, 'தான்ஆடத் தன்னைச்சுற்றிச்சிலர் ஆட, இருந்தால் போதும் என்று எண்ணுகிறார் போலும்.

தமிழரசுக்கழக, மாநாட்டிலே, திரு. வி. க., படேலிசத்தைக் கண்டித்தாரே பலமாக—எப்படி முடிந்தது? வடநாட்டுப் பாசிசத்தை வன்மையாகக் கண்டித்தாரே, அது, எதைக் காட்டுகிறது? தமிழ் மாகாணம், மட்டுமல்ல, அவர்கள் கேட்பது—அது மட்டும் கேட்பதானால், காமராஜர் போதும், அவர் கூறும், 'தன்னாலே வரும்' போதும்! ஆனால், திரு. வி. க. வலியுறுத்திக் கூறினதுபோலவும், ம. பொ. சிவஞானம், இடித்துக் காட்டினது போலவும், அடிமைத் தமிழ் மாகாணம்—எதற்கும் வடக்கு நோக்கும் நிலைமை — கட்டளையை நிறைவேற்றிவைக்கும் காரியாலயக் குமாஸ்தாக்களின் கூடம் — வேண்டாம், தன் நிலையைத்தானே நிர்ணயித்துக் கொள்ளும், அதிகாரம் வேண்டும் என்பதுதான், அவர்கள் கோரிக்கை.

"தன்னாலேவருவது" அல்ல அது.

எந்தக்கால முதற்கொண்டு, வடக்கு நோக்கும் நிலையும், பாசிசமும் காங்கிரசில் இருந்து வருகிறது என்பதைத் திரு. வி. க. வின் பேச்சு எடுத்துக காட்டிற்று.

"நானும், பெரியாரும், வ. உ. சிதம்பரமும், காங்கிரசில் பாசிசம் புகுந்ததால், தனிமனிதரின் உரிமையைக் காப்பாற்றவே, அதைவிட்டு வெளி ஏறினோம்" என்று பேசியிருக்கிறார், திரு. வி. க.

இந்தப் பாசிசப் பிடியிலிருந்து, 'தன்னாலே விலக' முடியாது! இதை உணர்ந்த சில காங்கிரசார் துவக்கியிருப்பதுதான், 'சுயநிர்ணய உரிமையுள்ள தமிழகம்' வேண்டும் என்ற கிளர்ச்சி. அது குழப்பம்—தேவையற்றது— என்கிறார் காமராஜர். நாம் கூறுகிறோம், அது தேவை என்று மட்டுமல்ல, அது போதாது, மேலும் கொஞ்சம் தெளிவாக, இன்னும் சற்றுப்பலமாக, போகப்போகவேகத்துடன், வளரவேண்டும், பாசிசப் போக்கைத் தாக்கும் முறை.

"அவரும் காங்கிரஸ்காரர்தான்" —என்கிறார் காமராஜர் — மகிழ்ச்சியுடனா — அல்ல-காங்கிரஸ்காரராக இருந்தும், வடநாட்டு ஆதிக்கம், அ. நி. சபைப்போக்கு, இந்திக்குப் பணம் தருவது, என்பன போன்றவைகளைக் கண்டித்துப்பேசி, சுதந்திரத்தமிழ்க்குடியரசு என்றுகூறி, காங்கிரஸ் செய்யத்தவறியவைகளை மக்களுக்குக்கவனப்படுத்துகிறாரே, என்ற கவலையுடன்-சற்று அச்சத்துடனும்கூட.

தமிழரசுக் கழகத்தின், இந்தக் கோரிக்கை வலுத்து, எதிலே போய் முடியும் என்பதை உணர்ந்துதான், காமராஜர், 'தன்னாலே வரும்'என்று கூறித்,தடைஉத்தரவு போடுகிறார்.

திரு வி. க. இந்தக் கவலையை, அன்று, அதிகரிக்கச் செய்துவிட்டார்.

திராவிடம்—திராவிடநாடு—என்று பேசிவிட்டார்.

பாசிசமே படேலிசம் என்று பட்டவர்த்தனமாகக் கூறிவிட்டார்.

மொழிவழி மாகாணங்கள் முதலில் அமையும், பிறகு, அவை தம்முள் ஓர் கூட்டாட்சி ஏற்படுத்திக் கொள்ளும்-அதுதான் திராவிடநாடு —என்று தெளிவாகக் கூறிவிட்டார்.

எல்லையைக் குறிப்பது மட்டுமே தமிழரசுக் கழகத்தின் வேலையாக இருக்குமானால், காமராஜர் சொன்னதுபோல, இதற்குத் தனியாக ஒரு கழகம் தேவையா என்றுகூடக்கேட்கலாம்-ஆனால் அப்போதும், 'தன்னாலே வரும்' என்றபேச்சுஉதவாது. ஆனால் நோக்கம், எல்லைப் பிரச்னை மட்டுமா! அல்ல! தமிழரசுக் கழகம், காங்கிரஸ் கூடாரத்துக்குள்ளாகவே, கிளம்பும், புரட்சிப் புயல்! — அது வலுத்து - பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ள கட்டுரையில் கண்டுள்ளபடி-காங்கிரசுக்குள்ளாகவே, தீர்மானம் நிறைவேற்ற முயற்சிக்கும் — முயற்சி முறிந்தால், வெளிஏறி, வேலை செய்யும்-அப்போது, தமிழரசுக்கழகமாநாட்டிலே திராவிடநாடு பற்றியும் பேசினார்கள்என்றுநிலைமை இராது — திராவிடர் கழக மாநாட்டிலே சிவஞானம் பேசினார், திரு. வி. க. தலைமை வகித்தார், என்று ஆகும். அந்தநாள், வந்துவிடுமோ, என்ற அச்சமே காமராஜரை, "தன்னாலே வரும்" என்று பாடச்செய்கிறது.

எல்லை கோலும் வேலையைமட்டும் செய்வதானால், பரவாயில்லையே, புதுத்தொல்லையல்லவா இவர்களால் உண்டாகும்போலிருக்கிறதுஎன்று- எண்ணுகிறார் காமராஜர்.

அவர் யூகம், சரி. எல்லை பற்றிமட்டுமல்ல, அவர்கள்எடுத்துச் சொல்வது. உண்மையில், அதைப் பற்றிமட்டும் அவர்கள் எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

"வேங்கடம் நமது எல்லை!"

"சரி, பெறுவோம்."

"தடை உளது. ஆந்திரர் பிடி பலமாகிவருகிறது"

"நீக்குவோம்"

"அதையேகூறவந்தேன், தமிழகம் சிதையாமல் வேண்டும்."

"தமிழகம், எல்லை கோலியான பிறகு எப்படி இருக்கும்?"

இந்த நிலை பிறந்ததும், 'வடவேங்கடம் தென்குமரி' வரை தமிழகம் இருக்கும் என்றுமட்டும் சொன்னால் போதாது. சுதந்திரம், சுயநிர்ணயம், சமதர்மம்-இருக்கும்—என்று துவங்கி திரு வி. க. கூறினதுபோல, விந்தியம் சென்றே தீரவேண்டி வரும்! அந்த நிலை, விரைந்துவருகிறது.

பார்ப்பனத் தலைவர்கள், இந்தச் சூட்சமத்தைத் தெரிந்துகொண்டு தான் தமிழரசுக் கழகத்திலே பங்கு கொள்ள ஆவலைக் காட்டவில்லை.

சண்டே அப்சர்வர் ஆசிரியர் கூட்டும் தமிழர் மாநாட்டிலேயாவது,ஒரு வெங்கடேச ஐயங்கார், வரவேற்புக் கழகத்தலைவராக வரமுடிகிறது — இசைகிறார் — தமிழரசுக்கழகத்திலே

நுழையவில்லை.

ஏன்? சூட்சமம் அங்குதான் இருக்கிறது!

தமிழரசுக்கழகம், திராவிடர் கழகத்துக்கு நுழைவு வாயில்—என்று அவர்கள் கருதுகிறார்கள் — அவர்களின் 'கருத்து' தவறல்ல. தமிழரசுக் கழகம்—ஒரு பயணம்—திரு. வி. க. கூறியபடி, விந்தியத்துக்கு. வேங்கடத்தோடு, பயணம் முடிந்துவிடாது!

## சென்னை பேசுகிறது

16-ம் பக்கத் தொடர்ச்சி

சென்னை பேசுவது இது! சரியா? முறையா? தேவையா?

இந்தோ சைனாவில் குழப்பம். எப்படி இருக்கிறது அந்த நாடு, என்ன காரணம் குழப்பத்துக்கு, சரித்திரம் என்ன?—தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் மக்களுக்கு, ஏற்படுகிறதல்லவா? அறிஞர்கள், யாரேனும் இதைச் சொல்லக்கூடாதா? சொன்னார்களா? இல்லையே! துலாகாவேரி மகாத்மியத்தைத் தானே சொல்லித் தொலைக்கிறார்கள். நாட்டுக்கு ஏற்றது எது, மக்கள் அறிய வேண்டியது எது? உலக அரங்கிலே, புது இடம், புது அந்தஸ்த்து பெற்றுள்ள, இந்த நாளிலேயாவது உலக விஷயத்தை நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டாமா? தெரியச்செய்ய வேண்டாமா? வீரர்கள், போரறிஞர்கள், விஞ்ஞான வித்தகர்கள், அடிமைத் தளைஒடித்தபெரியவர்கள், ஆட்சி அமைத்தவர்கள், நல்லாட்சி நிறுவியவர்கள், நாடு வளம்பெறத் திட்டமிட்டவர்கள், புதுப் புதுப் பொருளை அளித்தவர்கள், ஆகியோர் பற்றி அரும் பெரும் விஷயங்களை எடுத்துக்கூறி, நம் நாட்டு மக்களுக்கு நல்லறிவு வரச் செய்யவேண்டிய நாட்களிலே, ராமர் ஜெனனத்தையும் சீதை சுயம்வரத்தையும், துரோபதையின் துகிலை உரிந்ததையும், வராக அவதாரத்தையும், வசிஷ்ட வியாக்யானத்தையுமா எடுத்துக் கூறிக் கொண்டிருக்க வேண்டும்.

உலகைச் சுற்றியவர்கள், விஞ்ஞானிகள், தொழில் நிபுணர்கள், ஆகியோர் பேசவேண்டிய நேரத்தில், சாஸ்திரிகள் சர்மாக்கள், பாகவதர்கள், ஆகியோர் பேசுவது, சரியா?

இளைஞர்கள் — கொடியும் உடையும் எதுவாக இருப்பினும் — இத்தகைய 'பிரசாரம்' நாட்டிலே நடைபெறுவதைச் சரியானது என்று, மனமாரக் கருதுகிறார்களா? ஸ்காந்தமும் பாகவதமும், காடுகளைக் கழனியாக்க, கவலையூர்களை களிப்பூர்களாக்க செல்வத்தைப் பெருக்க சீரை வளர்க்க, வாணிபத்தைப் பெருக்க, வளத்தை உண்டாக்க, பயன்தரக் கூடியவைகளா! இனி, மேலும் மேலும், உலகத் தொடர்பு அதிகப்படும் காலமல்லவா! அட்லாண்டிக் சாசனம், அமெரிக்க ஏகாதிபத்யம், டச்சு மிரட்டல், பிரன்சுப் பிடிவாதம், ரஷிய ராஜதந்திரம், கிரேக்கக் குழப்பம், துருக்கித் துயரம், பலஸ்தீன் பிளவு, ஈராக் எண்ணெய், ஜில்ஜிட் வீழ்ச்சி, இப்படி, உலக நிகழ்ச்சிகள், உருண்டுகொண்டிருக்கின்றன — இங்கே, நாம், நமது மக்களுக்கு, ஓய்வுநேரத்தில், பழனி மலைத் திருவிளையாடலைப் பற்றிக் கூறிக்கொண்டிருக்கிறோம். எவ்வளவு வெட்ககரமான, துக்ககரமான நிலைமை. உலகிலுள்ள வேறு எந்த நாட்டிலாகிலும், இதுபோலவா நிகழ்ச்சிகள் உள்ளன. இல்லையே! அங்கு மேலும் மேலும் அறிவைப் பெருக்கிக் கொண்டுள்ளனர். இங்கே, எங்கே புத்தறிவு பரவி விடுகிறதோ, என்று பயந்து, பழமை மரணப் படுக்கையில் இருக்கிறதே என்று கவலைப் பட்டு, பழமை விரும்பிகள், சென்னையில், ஒவ்வோர் பகுதியிலும், பழமையைப் பிரசாரம் செய்தவண்ணம் உள்ளனர். மக்கள் மனதை இவ்வழி திருப்பிக் கொண்டே இருந்தால் அவர்கள் உலகைக் காண்பது எப்போது, உண்மையைத் தெரிவது எப்படி? ஏன், இளைஞர்கள், இந்த நிலைமை மாற்றி அமைக்கக் கூடாதா? இது முடியாத காரியமுமல்லவே.

தியாகராய நகரிலே, கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டறிந்த கதையும், திருவல்லிக்கேணியில், கிரேக்கருடன் தமிழர் செய்த வாணிபமும், மயிலையில், மார்க்சின் தத்துவமும், முத்தியாலுபேட்டையில், அடிமைத்தனத்தை முறித்த அபிரகாம் லிங்கனின் கதையும், ராயபுரத்தில் சர். சி. வி. ராமன் கண்டுபிடித்த அற்புதங்களையும், ராயப்பேட்டையில், அமெரிக்க வியாபார முறையும், நகர் மத்தியில், ஜாவா நிலையும், என்று, இப்படி, சொற்பொழிவுகள் ஏன் நடத்தக் கூடாது மக்கள் எவ்வளவு, புத்தறிவு பெறுவர்! எவ்வளவு முன்னேற்றக் கருத்துகளைப் பெறுவர். நாடு எவ்வளவு உயரும். இதைச் செய்ய, வீரர் இல்லையா, விவேகி இல்லையா! குறள் இருக்க, சங்க இலக்கியம் இருக்க, தைத்திரேய உபநிஷத்தையா பேசிக்கொண்டிருக்கவேண்டும். பல நாட்டு சட்ட முறைகள், பல ஆட்சிகளிலே உள்ள திட்டங்கள், இவையன்றோ இன்று, மக்களுக்குத் தேவை. இவைபற்றி, எங்கே பேசுகிறார்கள்? இன்னமும், சென்னை, பேசுவது, செல்லரித்துப்போன ஏடுகளிலே உள்ள, சீந்துவாரற்ற விஷயங்களைத்தான்! இதை மாற்றி அமைக்க, ஒரு வழி இல்லையா?

## வெற்றி வேலை

5-ம் பக்கத் தொடர்ச்சி

எனவே, புதிய வேலையைப், பொறுப்புடனும், அனைவரையும் கலந்தாலோசித்துக் 'காரிய மாற்ற வேண்டுமென்னும் கண்ணிய புத்தியுடனும், கட்சி பலமே முக்கியம் என்று தலை எண்ணும் போக்கை மட்டுமே பெரிதாகக் கருதாமலும், மக்களின் தலைவர்கள் மேற்கொண்டு, மன்னராட்சியைவிட, மக்களாட்சி சிலாக்கியமானதாக இருக்கிறது என்று அனைவரும் ஒப்பும்படி, பாராட்டும்படி, நடந்துகொள்ள வேண்டுகிறோம்.

புதுக்கோட்டைத் திராவிடர் கழகத்தார், 'புனிதப் போரில்' ஒதுங்கி நிற்கும் உளுத்துப்போன போக்குடனின்றி, விடுதலை வேட்கை உணர்ச்சியுடன் நடந்துகொண்டனர். அவர்களை, நாம், மீண்டும் பாராட்டுவதுடன், வேறோர் வேண்டுகோளும் தருவோம்.

ஆட்சியிலே, திராவிடர் கழகத்தாருக்குப் பங்கு கிடைப்பினும், இல்லை எனினும், திராவிடர் கழகம், தங்கள் திட்டத்தை, மக்கள் ஒப்பும் வகை செய்யும் காரியத்தை அயராது செய்துவர வேண்டும். புதுக்கோட்டையை நடத்திச் செல்லும் பொறுப்பைப் பெறுபவர்கள் யாவராயினும், அவர்களிடம், திட்டத்தை விளக்கவேண்டும். பொது நலனைப் பொறுத்தமட்டிலே, யார் ஆட்சியாளராயினும், அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்—நமக்கென்றுள்ள திட்டமோ கொள்கையோ, ஊறுபடா வகையில். அது மட்டுமல்ல, ஆட்சியாளர்களாக வருபவர்கள், நாம், முன்னே கூறியபடி, களிப்பின் மிகுதியாலோ, கட்சி பலத்தாலோ, திராவிடர் கழகத்தாரை, அலட்சியப் படுத்தவோ, அடக்கவோ, முற்படினும், கழகம், மனம் உடையவோ, மருளவோ கூடாது; தமது திட்டத்திலுள்ள 'ஜீவ சக்தி'யிலே, தளரா நம்பிக்கையுடன், வேலை செய்யவேண்டும்—வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

புதிய நிலை பெற்ற புதுக்கோட்டையை வாழ்த்துகிறோம்.

## முரசு ஒலித்தது

8-ம் பக்கத் தொடர்ச்சி

யாற்றிவரும், அரசியல் நிர்ணய சபைப் பிரச்னை இருக்கிறது. காங்கிரசல்லாத மற்றக் கட்சியின் கருத்தைக் கொண்டு நாம் இதைக்கூறவில்லை. காங்கிரஸ்பற்றுள்ளவர்களின் கருத்தைக் கொண்டே கூறுகிறோம்.

அரசியல்நிர்ணயசபைக்குத் தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாகச் சென்றுள்ளவர்கள்

தேச பக்தியில்
ஜனநாயக உணர்ச்சியில்
மக்களின் தேவையை
அறிவதில்
தமிழ்ப்பண்பில்
நாடு அறிவதில்

மிக மிக மட்டரகமானவர்கள், என்று, கூறிவிட்டனர்—காங்கிரஸ் பற்றுள்ளவர்களே. மற்றக் கட்சியினர் கூறினால், மனமாச்சரியத்தால் சொல்கிறார்கள் என்று தள்ளவும், இவர்கள் யார் இதைக்கேட்க என்று கோபிக்கவும், கூடும். ஆனால், இந்தக் குற்றச்சாட்டு, கதர்சட்டையினருடையது—கருப்புடைக்காரர் பேச்சல்ல.

அரசியல் நிர்ணய சபையிலே தமிழகத்துக்கென்று அனுப்பப்பட்டுள்ளவர்கள் தமிழரின் நலனை அறிந்து பணிபுரியக் கூடிய பண்பினரல்ல—

கட்டைச் சாரீரம்-சுருதியில் சேராது-தாளம் தவறும்-வித்வான்.

புளிப்பும் நாரும் மிகுந்த நாட்டு மாங்காய்.

கருத்தமேனியும் பருத்த உடலும் உள்ள மங்கை.

தமிழரின் பண்பு அறியாத பிரதிநிதிகள்!

"இந்திய அரசியல் நிர்ணய மன்றத்தில் தமிழகத்தின் பிரதிநிதிகளும் இருந்தார்கள் என்பதை நாம் மறக்கவில்லை. ஆனால் அவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.? தமிழ் இனத்தைப்பற்றி, தமிழர் பண்பாட்டைப்பற்றி—அவர்களில் பெரும்பாலோருக்குள்ள ஞானம் எவ்வளவு? அவர்கள் அங்கு சென்று யாருக்காகப் பேசினார்கள் என்பதை எல்லோரும் நீங்கள் நன்கறிவீர்கள்.!"

என்று, சென்றவாரம் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டில், தோழர். ம. பொ. சிவஞானம் பேசினார் உள்ளம் வெதும்பி.

தேர்ந்தெடுத்த முறை
அவர்களின் தகுதி, திறமை
அவர்களின் செயல்

அனைத்தையும், காங்கிரஸ்காரரான மா. பொ. சி. கண்டிக்கிறார், ஒரு மாநாட்டில்—தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜர் முன்னிலையில். அவருடைய தைரியத்தையும், காமராஜரின் பொறுமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்படிக் கேட்டுக்கொள்ள அல்ல, இதைக்குறிப்பிடுவது. தன் நண்பர், தமிழ்நாடு காங்கிரசின் தலைவர் இருக்கிறார் என்றபோதிலும், உண்மையை மறைப்பதற்கில்லையே, உளத்திற் பட்டதைக் கூறவேண்டுமே என்ற பொறுப்புணர்ச்சியுடன் ம. பொ. சி. பேசவேண்டிய நிலையில், இருக்கிறது, அ. நி. சபையின் தமிழகப் பிரதிநிதிக் குழு அமைப்பு. நாட்டுப்பற்று அற்றவர்களைக் கொண்டு, நாட்டுக்குப் புதிய திட்டம் தீட்டுவது, குரல்கெட்ட வித்வானைக் கொண்டு பாட்டுக் கச்சேரி நடத்தச் சொல்வதைவிடச், கேடு பயக்குமே! எப்படி இதைச் சகிப்பது? எப்படி ஏற்றுக்கொள்வது? ஏற்பட்டு விட்டதே, இனி என்ன பரிகாரம்? பாடித்தொலைத்தான் — கேட்டுத் தொலைத்தேன்—நமக்கு அத்தகைய பாடகன்தான் கிடைத்தான் என்று கூறிவிடுவது போல, இந்தப் பிரச்னையிலேஇருந்து விடுவது, பேராபத்தல்லவா—எதிர்காலத்தையல்லவா, அவர்கள் சித்தரிக்கிறார்கள். இனி என்ன செய்வது, என்பது முக்கியமான பிரச்னை.

தமிழ் நாட்டின் சார்பிலே அனுப்பப்பட்ட பிரதிநிதிகள், தகுதியானவர்களல்ல, தமிழர்களுக்கு ஏற்றவர்களல்ல, என்று பேசியதைக்கேட்டுக் கொண்டிருந்த தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர், காமராஜர், அதை மறுக்கவில்லை! எப்படி மனமறிந்து, நண்பர் சொல்லும் உண்மையை மறுப்பது என்று இருந்துவிட்டார்போலும். அவர்களை அனுப்பிவைத்த கைங்கரியத்திலே, காமராஜருக்குப் பங்கு உண்டு. அவர் முன்னிலையில் தான் ம. பொ. சி. பேசினார். என்ன பதிலுரைத்தார் காமராஜர்?

மாநாட்டின்போது, திடீரென்று அவர் அதுபோல் பேசினாரா? அல்ல! அவருடைய "தமிழ் முரசு" பல முறை, இதனை விளக்கமாக எழுதிற்று.

சந்தர்ப்பவாதிகள்
ஏகாதிபத்யதாசர்கள்
எதேச்சாதிகாரப்போக்கினர்

இவர்கள்! என்று. இவர்களைக் கொண்ட அரசியல் நிர்ணயசபை, தமிழருக்குஉரிமைதரும் முறையிலே பணிபுரிவது முடியாது என்று, எழுதிற்று.

தமது கட்சியின் முக்யஸ்தர் பகிரங்கமாக இதனைக் கூறும் போது, மௌனம் சாதித்தது, ஏன் என்று நண்பர் காமராஜரைக்கேட்கிறோம். தவறு நடந்துவிட்டது என்று அவரும்ஒப்புக்கொள்கிறாரா? அங்ஙனமாயின், அந்தத் தவறை, இனியேனும், களைய முற்படுவாரா? நாட்டுமக்களின் எதிர்காலத்தைத் தீட்ட இவர் அனுப்பியவர்கள், வெளிப்படையாக, மாநாட்டிலே, கண்டித்துப் பேசப்படவேண்டியவர்களானபிறகு, அவர்களை அங்கு அமரவிடுவதும்,அவர்களைக்கொண்டு அரசியல் திட்டம் தீட்டுவதும் சரியாகுமா?

தமிழகத்தின் பிரதிநிதிகளாகச் சென்றவர்கள்,

தமிழகத்தின் எல்லை
தமிழகத்தின் உரிமை
தமிழகத்தின் சுயநிர்ணயம்

ஆகிய எதனையும் கவனிக்கவில்லை. ஒரு பலம்பொருந்திய மத்யசர்க்கார் என்ற திட்டத்தின்மீதே வேலைசெய்தனர்.

அ. நி. மன்றம் தயாரித்துள்ள புதிய சமஷ்டி அரசியலில் தமிழகம் தனி அரசுரிமைகோண்ட ஒரு சுதந்திர அங்கமாக அல்லாமல், அடிமை மாகாணமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் பொருளாதாரம், கைத்தொழில், வாணிபம், ஆகிய ஜீவாதாரமான உரிமைகள் பலம் வாய்ந்த மத்யசர்க்கார் என்ற பெயரால் பறிக்கப்பட்டுள்ளன"

என்று, நண்பர் சிவஞானம்,பேசியிருக்கிறார். ஆகவே, கேடுநேரிட்டும் விட்டது, என்பது, தெரிகிறது. இதை அவர், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் முன்னிலையிலேயே தெரிவித்தும்விட்டார். ஆம்! உண்மை அதுதான். உதவாக்கரைகளை அனுப்பினர்—ஊறு தேடிக்கொண்டனர் தமிழகத்துக்கு. உத்தரகுரலினரிடம் ஊராளு உரிமை போய்ச்சேர்ந்தது. நண்பர்களின் நல்லுரையைக் கேட்

கும் நற்பண்பும் அவர்களுக்கு வேம் பாகிவிட்டது. எல்லாம் சரி, இனி என்ன வழி?

அரசியல் திட்டம் வகுத்தாயிற்று—அடிமைத்தமிழகம் தெரிகிறது—அதைக்கண்ட பிறகு, என்ன செய்ய வேண்டும்? "நல்லபழம் கிடைக்குமென்று பார்த்தேன்—கிடைத்ததை விடுவானேன்—கொடு"—என்பதா? பழத்தைப் பொறுத்த பிரச்னையாக இருப்பின், வயிற்றுவலியோடு ஒழியும் தொல்லை. இது பண்டைப் பெருமை வாய்ந்த தமிழகத்தின் எதிர்காலத்தைப்பற்றிய பிரச்னையாயிற்றே—இதை அவ்வளவு சாதாரணமாகவிட்டுவிடமுடியுமா—விடலாமா? வேறென்ன செய்வது? — விசாரத்தோடு, எண்ணியிருப்பர், மாநாட்டுக்குச்சென்றிருந்த அன்பர்கள்

செய்ய வேலையும்,வழியும், நிரம்ப இருக்கிறது.

முதல் வேலை, இப்போதுள்ள அ. நி. சபைக்குப்போயிருக்கும் தமிழகப்பிரதிநிதிகள், தக்கவரல்ல என்பதைத், தமிழரசுக் கழகத்தார், நாட்டுக்குக்கூறவேண்டும்—ஊரூர்சென்று. திராவிடர் கழகத்துக்கு இதைக் கூறத்தேவையில்லை. அவர்கள் இதனை அறிந்து உரைத்து ஆகிவிட்டது. எனவே, காங்கிரஸ் வட்டாரத்துக்கு இந்தக்கருத்தை நண்பர் சிவஞானம் தரவேண்டும்.

தமிழ்நாடு மாகாணக்காங்கிரசைக் கூட்டி, அதிலே, இந்தக்கருத்துள்ள தீர்மானத்தைநிறைவேற்றவேண்டும்.

அதன் தொடர்ச்சியாகத் தமிழகத்தின் சரியான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்களைக் கொண்டு புதியதிட்டம் தயாரிக்க வேண்டும்.

இவ்வளவையும், நண்பர் சிவஞானம், காங்கிரஸ் வட்டாரத்தில் செய்துபார்த்து, அங்கு,முடியவில்லை என்றால், பொதுமக்களிடம் வழக்கைக்கூறமுன்வரவேண்டும். அதற்கு அடுத்த கட்டமாகத், தமிழகத்தை அடிமை நாடாக்கும் திட்டத்தை ஏற்றுக்கொள்வதில்லை என்ற முடிவு செய்துவிட்டால், திராவிடர் கழகம் துணை நிற்கும். தமிழரசுக்கழகம், திராவிடர் கழகம், இரண்டும்கூடிப் புதிய தமிழக விடுதலைகாணப் பணி புரியமுடியும். எனவே, நண்பரின் முதல் வேலை, அவர் மாநாட்டிலே எடுத்துரைத்த உண்மையை, காங்கிரஸ் வட்டாரத்தில் எடுத்துக்காட்டித், தமிழ்நாடு காங்கிரஸ் பிரதேசமாநாட்டிலே வலியுறுத்தி, உண்மையை நிலைநாட்டுவதுதான். நண்பருக்கு, அதற்கு ஏற்றநெஞ்சுறுதியும், உண்டு என்று நம்பியே இதைக்கூறுகிறோம். அத்தகைய திட்டமின்றி, தமிழகத்தின் சார்பிலே சென்றவர்கள் சரியான பிரதிநிதிகளல்ல, அவர்கள் தயாரித்த திட்டம் தமிழகத்தை அடிமை மாகாணமாக்கிவிட்டது என்று பேசுவதோடு மட்டும் நிற்பதானால், அது, புளித்த பழம், வகையில்லா வித்வான், வசீகரமற்ற பெண், என்பனபோல், பயனற்ற திட்டம், என்றாலும் என் செய்வது என்று கூறும் போக்காகப் போகும். பயனில்லை. முரசம் அல்ல, அத்தகு நிலைக்கு ஏற்றகருவி! எனவே, மீண்டும் கூறுகிறோம், உண்மையை உரைத்ததோடு நில்லாமல், ஊருக்கு உகந்த கட்சியாக, உள்ள காங்கிரசில் இந்த உண்மை ஒப்புக்கொள்ளப்படும் வகையில் வேலையை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். 'இந்திய அரசியல் தலைவர்கள்'—காங்கிரசுக்குள் ஒருபிரிவினர் என்ன எண்ணுகிறார்கள் என்பதைக் கவனித்துப்பார்க்க மாட்டார்கள்—தமிழ்நாடு காங்கிரஸ் என்ன சொல்கிறது என்பதைத்தான் கவனிப்பார்கள். எனவே தமிழரசுக் கழக மாநாட்டிலே கருத்தைத் தெரிவித்ததோடு நின்று, பயனில்லை. தமிழ்நாடு காங்கிரசை, இந்நிலைக்குக் கொண்டுவர வேண்டும்—முயற்சிக்க வேண்டும்-முடியாது போனால், புது முகாம்,அமைக்கவேண்டும். அமைத்தால் அந்தமுகாம் நிச்சயமாகத்திராவிடர்கழக முகாமுக்கு, வெகுவெகு, அருகாமையில்தான் இருக்கும்.

★

சாது

7-ம் பக்கத் தொடர்ச்சி

நான் குழந்தைக்கு பால் கொடுக்கறேன்."

"ஆமாம். நீ இரு. நான் எடுத்துக் கொள்றேன்."

* * *

மாறிவிட்டது, சுபாவம்! அளவுக்கு மீறித், தண்ணீர் வந்தால், ஆற்றிலிருந்து வாய்க்காலில் திருப்பிவிட்டு, வெள்ளத்தின் வேகத்தைக் குறைக்கிறோமல்லவா! உள்ள உணர்ச்சியும் அப்படித்தான் அடக்கியே வைத்திருக்க வைத்திருக்க, எங்கெங்கோ பாயும்—மேயும்; கட்டுக்குக் கொண்டுவந்து, பக்கம் பார்த்துத்திருப்பிக், கொதிப்பேறுதபடி குறைந்து, முறைப்படுத்தினால், மோதுதலும் தாக்குதலும், குறையும். இது, நிகழும்போது தெரிவதில்லை. ஆனால் இந்த 'ரசாயனம்' வெற்றி பெற்று, நிலைமை மாறின பிறகு, நாம் கூறிவிடுகிறோம், சூட்சமத்தைத் தெரிந்து கொள்ளாமல், அவன் நல்லவன், இவன் நல்லவன் என்று. இயல்பு, அவ்விதம், பொதுவான இலக்கணத்துக்கு உட்படுவதில்லை. இடம், காலம், முறை, சம்பவங்கள், பயிற்சி, மற்றவருடன் கொள்ளும் தொடர்பு, ஆகியவைகளாலே, உருவாக்கப்பட்டும், வளர்ந்தும், மாறியும், வேறு உருப் பெற்றும், ஒவ்வொரு விநாடியும், வளருகிறது. அதன் தன்மையை, அறுதியிட்டுக் கூறிவிட முடியாது—கூறவும் கூடாது. ஷேக் அப்துல்லாவுக்குக் காஷ்மீர மன்னர் பாராட்டுதல் தருவதும், சர்ரை விட்ட சண்முகத்துக்கு மந்திரி பக்தவத்சலம் விருந்தளிப்பதுமான, சம்பவங்களைப் பார்க்கிறோம! இவை, இயல்பு, அவரவர்களுக்கு மாறிவிட்டதா இல்லையா, என்ற ஆராய்ச்சிக்கு, ஏற்ற சுவையுள்ள சமபவங்களல்லவா!!

## புதிய தமிழ் தினசரிகள்

'லிபரேடர்' டாக்டர் கிருஷ்ணசாமி ஒரு தமிழ்த்தினசரி வெளியிட மும்முரமாக முயன்று கொண்டிருக்கிறார்.

காஞ்சி பணிமொழியாரும் (போர்வாள்) சில நண்பர்களும் சேர்ந்து, புதிய தமிழ்த் தினசரி நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள்.

இரண்டும் திராவிடர் கழகக் கொள்கைகளை ஆதரிக்கும் எனத் தெரிகிறது.

## பிரிவுபசாரம்

சிலாங்கூர் மாகாண தொழிற்சங்க சம்மேளனத் தலைவர்.R. மோஹன் அவர்கள் தாயகம் (திராவிடநாடு) செல்வதை முன்னிட்டு 18—10—47-ல் கோலாலம் காட்ஜில்லா தோட்ட தொழிற்சங்க பிரதிநிதிகளால், (பந்திங்ராயல்தியேட்டரில்) ஓர் விசேஷதேனீர் விருந்தளிக்கப் பட்டது.

# * எங்கோ ஓரிடத்தில்! *

எனக்கே வெட்கமாக இருக்கிறதம்மா? நண்பர்களெல்லாம் கேலி செய்கிறார்கள்!

உன்னைமட்டுந்தானா! மகனே! என்னையும் கூடத்தான் கேலி செய்கிறார்கள். ஜெமீன்தாரணியின் திருமகன், தேசம் சுற்றிப்பொதுஉடைமை பேசுகிறானே, இது என்ன வேடிக்கை, என்று கேட்கிறார்கள்.

ஏட்டிக்குப் போட்டி பேசி என் வாயை அடக்கிவிட வேண்டாமம்மா. நீயே சொல்லு, அப்பா அமைச்சராக இருக்க...........

இருந்தால்...........?

மகனைச் சுற்றிக்கொண்டு, இரகசியப்போலீஸ் இருப்பதா? மகன், ஆதரித்துவரும் கட்சியின் ஆட்களெல்லாம் சிறையில அடைபட்டும், வழக்குமன்றங்களில் நிறுத்தப்பட்டும் வாடுவதா என்று, கேட்கிறார்கள். கேலி செய்கிறார்கள்.

அப்பாவும் அதேதான் சொல்கிறார், நம்ம மகன் அந்தக் கட்சியிலே இருந்தும், நமக்குத துளிபிரயோஜனமும் இல்லையே. ஏன், இவன், என்னை உத்தேசித்தாவது, தன் கட்சிக்காரர்களுக்குக் கூறி, இனிநாம் காங்கிரசுக்கு விரோதமாகப் போகவேண்டாம், சட்டத்தை மதித்து நடப்போம், ஏனெனில், அப்பா, ஆயாசப்படுகிறார், என்று புத்தி கூறக்கூடாது. என்னை நண்பர்களெல்லாம் கேட்கிறார்கள், ஏன்சார்! உம்ம மகன், அந்தக் கட்சியிலே, முக்யஸ்தராக இருக்கும்போது, ஏன் அவரைக்கொண்டு அந்தக் கட்சியை அடக்கஒடுக்கமாக நடந்துகொள்ளச் சொல்லக் கூடாது என்று பேசுகிறார்கள். அவர்கள் கேட்பது நியாயந்தானே. என்னடா நம்ம அப்பாதானே இப்போது மந்திரி, அவருக்குச் சங்கடம் உண்டாக்கும்படி நாம் கட்சியைநடத்தலாமா, என்று இவனுக்குத் தோன்ற வேண்டாமா—எனறு உன் அப்பா, மனக்கஷ்டத்தோடு பேசுகிறார்.

அவருக்காக, என் அருமைக் கொள்கைகளை விட்டுவிட முடியுமா? அம்மா! நீ என்னை என்ன வென்று எண்ணிக் கொண்டாய்,?

புத்திசாலி என்று எண்ணிக்கொண்டுதான் பேசுகிறேன், உன்னை, உன் கொள்கையை விட்டு விடும்படி யார் சொன்னார்கள். தாராளமாக வைத்துக்கொள். ஆனால் சர்க்காருடன் ஏன் மோதிக்கொள்கிறாய்—அதனால்தானே உன் அப்பாவுக்குச் சங்கடம் வருகிறது.

என்தோழர்கள், ஜெயிலில் வாடுகிறார்கள்...............

வெளியே விட்டு விடச் சொல்கிறேன்...........

வழக்குகள் வேறு உள்ளன!

வாபஸ் பெறச் சொல்கிறேன்—ஆனால் ஒரு வாக்குறுதி வேண்டும்—பழையபடி, உன் அப்பாவுடைய கட்சியுடன் மோதிக் கொள்ளக் கூடாது.

சும்மா இருக்க முடியுமா அம்மா! வெறும் கொள்கைகளை மட்டும் எடுத்துப் பசிக்கொண்டிருந்தால், சுவையும் இராது, பயனும் கிடையாது, விறு விறுப்பு இருக்காதே

காங்கிரசைத் தாக்கினால் இதெல்லாம் இருக்கிறதா?

ஆமாம்! அடாடா! வேலைநிறுத்தங்களின் போது காங்கிரசின் எதேச்சாதிகாரம், பாசிசப்போக்கு, இவைகளைப்பற்றிப் பேசும்போது, எவ்வளவு விறு விறுப்பு இருந்தது தெரியுமா?

அதனாலேதான் அப்பாவுக்கு அவ்வளவு அருவருப்பு.

அவருடைய உதவியும் கிடைக்கக் கூடும் என்று கூடச் சில நண்பர்கள் எண்ணினார்களே, அம்மா.

அவர்கள் உன் அப்பாவை அறியாதவர்கள். உனக்குத் தெரியுமே அவரை, நீ எப்படி அவ்விதம் எண்ணலாமடா கண்ணே!

இப்போதுதர்ம சங்கடமான நிலைமையாகி விட்டதே அம்மா! என் கட்சியினரோ, நீபோய்ச்சொல்லப்பா, உன்னால்தான் முடியும், என்கிறார்கள். இங்கே வந்தாலோ, நீ, கட்சியை வேறு விதமாக நடத்து என்று சொலகிறாய்.

ஆமாம்! வேறு விதமாக நடத்தினால்தான், உன் அப்பாவின் விசாரம் தீரும், கீர்த்தியும் ஏற்படும். சார்! எவ்வளவோ முயன்றோம் முடியவில்லை அடக்க. ஒரே ஒரு 'ஸ்விட்ச்' திர்ந்துவிட்டது பார்—என்று கூறிப் பூரித்து உன் அப்பாவையும் பாராட்டுவார்கள். உங்கள் போக்கு மாறிவிட்டால், பிறகு, ஜெயிலிலே உள்ள உன்தோழர்கள் வெளியேவருவர்,....

வந்து வாய் மூடிக் கொண்டு இருக்கவேண்டும்! முடியுமா?

ஏன், வாய் மூடிக்கொண்டு இருப்பது. தாராளமாகப்பேசலாம். பேசவேண்டுமே........

எதை? கொள்கைகளையா! உப்புச்சப்பே இராது. காரசாரம் வேண்டுமே.

ஏராளமாக ஏற்பட வழி இருக்கிறது காங்கிரசின் மீது காட்டிய கோபத்தைத் திராவிடர் கழகத்தின் மீது திருப்பு—பேச்சும் விறு விறுப்பாக இருக்கும் —உன் அப்பாவுக்கும் மன நிம்மதியாகும்.

ஆஹா! அன்னையே! சரியான யோசனை....என் நண்பர்களும் சிறையிலே வாடத் தேவையில்லை, வழக்குகள் இரா, ........பேச்சுக்கும் குறைவில்லை,

அப்பாவுக்கும் ஆயாசம் இராது, மகன் இருந்தும் நமக்கு இந்தத் தொல்லையா என்று அவரும் மனக்கஷ்டப்படத் தேவையில்லை, அப்பா அமைச்சராக இருந்தும், நமது கட்சிக்கு இந்த அல்லலா என்று நீயும் கஷ்டப்படத் தேவையில்லை...............

ஆமாமம்மா! இதோ செல்கிறேன் திராவிடர் கழகத்தைத் தாக்குவதற்குக்கொஞ்சம் தயார் தீனிவேண்டும்....

அதற்கென்னடா மகனே, ஏராளமாகக் கிடைக்கும். பழையபாடந்தானே—கஷ்டம் ஏது.

போய் வருகிறேன் அம்மா.

போய்வா, குமாரா!

விரைவில் என் நண்பர்கள் விடுதலையாகி விடுவார்கள், கஷ்டம்குறையும்.

சுகம் பிறக்கும், போய்வா, சொன்னபடி நட.

*

### திருமணம்

பட்டிவீரன் பட்டி ஒ.வெ. கருத்தப்பாண்டியன் குமாரன் நீர்காத்தலிங்கத்துக்கும் உசிலம்பட்டி திரு A.P. T. அய்யநாடார் மகள் பாப்பாஅம்மைக்கும் 27-10-47 அன்று உசிலம்பட்டியில் திரு W.P.A சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது. ப. ர. மூத்துச்சாமி, பெ. சி. சிதம்பர நாடார், அ. பொன்னம்பலனார் ஆகியோர் திருந்திய திருமணம்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

—

# சென்னை பேசுகிறது!

★

"அவர்கள் சொல்வதெல்லாம் சரிதான். ஆனால், இவர்கள் எண்ணிக் கொண்டிருப்பது போலப், பழைமையிலே, பழையபுராண இதிகாசங்களிலே, யாருக்குப்பிடித்தமிருக்கிறது, யார் இவைகளைக் கட்டிப் பிடித்துக்கொண்டு அழுகிறார்கள். அந்தக்காலம் மலை ஏறிவிட்டது சார். வீணாக இவர்கள் பழைமையைக் கண்டித்துக் கொண்டிருக்கிறார்கள்"

என்று, கூறுகின்றனர், சில நண்பர்கள்.

இவர்களுக்கு,நாம், பழைமையின் கேடுகளையும் கொடுமைகளையும் எடுத்துக் காட்டிக் கண்டிக்கும்போது, கோபம் வருகிறது. ஆனால், தக்க காரணத்தோடும், நல்லநோக்கத்தோடும் நாம் கூறுவதால், மறுத்துரைக்க முடிவதில்லை; அதேபோது, பழைமையின் பாசமும் இவர்களை விடுவதில்லை. எனவேதான் இவர்கள், பழைமை மடிந்தேவிட்டது, இன்னமும் ஏன், அதனைப்பற்றிப் பன்னிப்பன்னிப் பேசவேண்டும்என்று கேட்கிறார்கள்.

ஆனால், உண்மையோ, இதற்கு நேர்மாறாகஇருக்கிறது.பழைமையைப் பலவழிகளாலும் புகுத்தப் பலமான முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது— பட்டிக்காடுகளிலே அல்ல; படிப்பும் நாகரிகமும் மிகுந்த சென்னையில்—தலைநகரில— ஆட்சியாளர்களின் அலுவலகத்தின்நகரிலே. நாளெல்லாம் உழைத்தலுத்தான பிறகு, மக்கள், ஏதேனும் ஓரளவு அறிவு விருந்து பெற, மகிழ்ச்சி பெறக், கழகங்கள்பணியாற்றவேண்டியது முறையாயிருக்க, சென்னையிலே, மூலையிலும் முடுக்கிலும், முடி நரைத்தவர்கள், பிடி ஆட்களைக் கொண்டேனும் ஏற்பாடு செய்யச்சொல்லிக், கூட்டங்கள் நடத்தி, அங்கு, மங்கிப்போய், மடிய நேரம் பார்த்துக் கொண்டிருக்கும், பழைமைக்குப் புகழ் பாடிக்கொண்டுள்ளனர். ஒவ்வோர் ஞாயிற்றுக் கிழமையும், இந்தப் பழைமை ஓலம் நடந்தவண்ணமிருக்கிறது — ஓரிரு இடத்தில் அல்ல, சென்னையில பல பகுதிகளில். கடற்கரையோ, பெரிய வெளியோ, பெரிய மண்டபமோ கூடத் தேவைப்படுவதில்லை, இவர்களுக்கு. ஏனெனில், கூட்டம் இருப்பதில்லை. என்றாலும்,ஏழெட்டுப் பேர்வழிகளை முன்னால் உட்கார வைத்துக்கொண்டு, எதையோ கூறி விட்டுப் போகிறார்கள். 'இந்து' பத்திரிகை அக்கரையும் அன்பும் காட்டி, உலகம் உய்ய இந்த உத்தமர்கள் இக்காரியம் செய்கிறார்கள் என்று உரைப்பதுபோல, முக்யத்துவம் தந்து, நகரநிகழ்ச்சிக் குறிப்புகளிலே, முதலிடம் கொடுத்து, இந்தச் செய்திகளை வெளிபிடுகிறது. பேசும்போது கூட்டமோ கிடையாது; பேச்சால் பயனோ பூஜ்யம்— பேசுபவர்களோ பூசி மெழுகுபவர்— என்றாலும், 'இந்து' ஒரு பிரபல பத்திரிகை — இலண்டனில் கிளை ஆபீஸ் கொண்டது — உலக ராஜதந்திரிகளுக்கெல்லாம்கூடஉபதேசம் செய்யுமளவு அறிவுக் களஞ்சியம் தன்னிடம் இருப்பதாகக் கருதும் ஏடு — அப்படிப்பட்ட ஏட்டிலே, இந்த 'பாட்டிமார் விஷயம்' இடம் பெறுவதன் மூலம், மதிப்புப்பெற்று, நாட்டு மக்களால், கவனிக்கப்படுகிறது. ஏன், இத்தகைய அவசியமற்ற, பயனற்ற, கேடு தரும், பழைமைப் பிரசாரத்துக்கு, 'இந்து' ஆதரவளிக்கிறது! காரணம் கூறினாலோ, கலெக்டர் வேலையிலிருக்கும் ஐயர் முதற்கொண்டு, கர்ணம் வேலையிலிருக்கும் திராவிடர் வரையிலே,கோபிக்கிறார்கள். பழைமைக்கு அவ்வளவு பரிந்து பேசுவது, நேர்மையா? பலகலைகளையும், உலக நிலையையும், மற்றப் பக்கங்களிலே வெளியிடும் பத்திரிகை, இந்தப்பழைமைக் குப்பையையும் ஒரு பக்கத்தில் ஏன் வெளியிட்டு, விளம்பரமளிக்க வேண்டும்! இந்தப் பிரசாரம் அவசியமா? என்று கேட்கிறோம். பழைமையைக் கண்டிக்க வேண்டியதில்லை, அது மங்கி மடிந்துவிட்டது என்று கூறும் நண்பர்களுக்குக் கூறுகிறோம், இதோ சென்னை பேசுகிறது, கேளுங்கள்—என்ன விஷயத்தைப் பேசுகிறது என்று பாருங்கள். நவம்பர் 9-ந் தேதிய 'இந்து' பத்திரிகையிலே உள்ள நகர நிகழ்ச்சிகளின் விளம்பரம் இது; கருத்துள்ளோர் கண்டு கூறட்டும், நியாயமா என்று.

ராமகிருஷ்ணமடம், மயிலை. பயங்கர தேவ வழிபாடு என்பது பற்றி உபன்யாசம்.

தொண்டைமண்டலப் பள்ளியில், பாகவதவிஜயம்—காலட்சேபம்.

பக்தி—நிஷ்காமகர்மம் என்பது பற்றி, ராயப்பேட்டை கௌடிய மடத்தில் உபன்யாசம்.

ஸ்கந்தபுராணம்-யுத்த காண்டம்-என்பது பற்றிப் பெரம்பூரில் காலட்சேபம்.

முத்தியாலுபேட்டையில்,காவேரி மகிமை பற்றி உபன்யாசம்.

கீதார்த்ததத்துவத்தைப் பற்றி எழும்பூரில் உபன்யாசம்.

நுங்கம்பாக்கத்தில் சங்கராச்சாரி உபதேசம்—உபநிஷத் பாஷ்ய உபதேசம் ஒரு சாஸ்திரியால்.

மைலை, சாயி சமாஜத்தில் கீதை உபன்யாசம்.

திருவல்லிக்கேணி, வானமாமலை மடத்திலே, துலாகாவேரி மான்மிய உபதேசம்.

தியாகராயநகர் குகானந்த மண்டலில், ஸ்ரீ வித்யா, உபதேசம்,

சங்கரமடத்தில், துலாகாவேரி மகாத்மீய உபதேசம்.

பஞ்சாயத்ன பூஜை என்பது பற்றித் தம்புசெட்டிதெருவில்.

தைத்ரேயிய உபநிஷத்தைப்பற்றி, தியாகராயநகரில்.

கச்சாலேஸ்வரர் அக்ரகாரத்தில் ஞான வாசிஷ்டம்.

புரைசவாக்கத்தில், ஜீவன் முக்தி விவேகத்தைப் பற்றி விளக்கம்.

மைலாப்பூர் குருகுலத்தில் ஞான வாசிட்டம்.

திருவல்லிக்கேணி தமிழ்ச்சங்கத்தில் ராமஜெனனம்!

மயிலை வேத அத்யயன சபையில் லோகமதசார உபதேசம்.

தியாகராயநகரில், பஞ்சாதசி உபன்யாசம்.

மைலாப்பூரில், வாசுதேவமனனம் என்பதுபற்றி உபன்யாசம்

சிந்தாதிரிப் பேட்டையில், பழனிமலை திருவிளையாடல்—உபன்யாசம்.

சிந்தாதிரிப்பேட்டையில் வேறோர் இடத்தில் கந்தர் அனுபூதி உபன்யாசம்.

தாயுமானூர் பாடல் உபதேசம் சிந்தாதிரிப்பேட்டையில் மற்றோர் இடத்தில்.

கம்ப ராமாயண உபன்யாசம் மாம்பலத்தில்.

இப்படி இருக்கிறது நிகழ்ச்சிகள். மற்றவைகளிலே பெரும்பாலானவை நடனம், சங்கீதம்.

(12ம் பக்கம் பார்க்க)

## மாங்கல்யத்தை விற்று

4-ம் பக்கத் தொடர்ச்சி

சொல்லப்படுகின்றது. இதுவும் நாம் கேள்விப்படாத — கண்டிராத ஒரு வியப்பாகும். பார்ப்பனர்கள் பெரும்பாலும், தங்களுடைய பொருளைச் செலவு செய்து ஆண்டவனை வழிபடும் முறையை மேற்கொள்ள முனைவதில்லை அதிலும், தங்களுக்கு உணவுக்கு இல்லாவிட்டாலும், இறைவனுக்கு வேண்டியதைச் செய்ய வேண்டியதே முறை என்ற அளவுக்கு, அவர்கள் ஆண்டவனிடத்தில் அன்பு காட்டிக் கொள்ளக் கூடியதாகத் தங்கள் அறிவைப் பாழ்படுத்துவதுமில்லை. அவர்களுக்குத் தெரியும் ஆண்டவன் யார் என்பதும், தங்களுக்கும் ஆண்டவனுக்குமுள்ள தொடர்பு எப்படிப்பட்டதென்பதும். பார்ப்பனர், ஆண்டவனுடைய பிரதிநிதிகள் என்பதைப் புராண — ஆகமங்களே வலியுறுத்துகின்றன. "என்னை வணங்குவதும், பார்ப்பனரை வணங்குவதும் ஒன்றே" என்று அந்த ஆண்டவனே அநேகம் தடவை கூறியுமுள்ளார். பதஞ்சலி — வியாக்கிரபாதர் என்ற முனிவர்களுக்குப், பார்ப்பனரைப் பற்றிய விளக்கம் கூற விரும்பிய சிவன், தம்மையே பார்ப்பனரில் ஒருவராகக்காட்டி, "எனக்கு எத்துணைப் பெருமையும் சிறப்பும் உண்டோ, அத்துணைப் பெருமையும் சிறப்பும் பார்ப்பனருக்கும் உண்டு" என்று விளக்கம் உரைத்திருக்கிறார் என்பதைத் தெரிந்துள்ள எவரும், இங்கு பேசப்படும் கலயனார் என்ற பார்ப்பன அன்பர் தம்முடைய செல்வம் முழுவதையும், தம்மில்வேறுபடாத- தம்மையொத்த சிவனுக்குத் தூபம் இடுவதில் செலவு செய்தார் என்பதை ஒருபோதும் நம்பவே மாட்டார்கள். ஒரு பார்ப்பனன் தன்னுடைய பொருளைச் செலவு செய்து கடவுளுக்குத் தூபமிடுவதோ, வேறு கடவுட்காரியம் செய்வதோ, தனக்குத்தானே தூபம் இட்டுக்கொள்வது போலாகும். அதிலும், தானும் தன்னுடைய மனைவிமக்களும் நாட்கணக்கில் பட்டினி கிடக்கும் அளவுக்குக், கடவுளிடத்தில் அன்பு காட்டித் தன்னுடைய செல்வம் முழுவதையும் அவருக்குத் தூபம் இடுவதிலேயே ஒரு பார்ப்பனன் செலவு செய்தான் என்பதைக், கடவுளுக்கும் பார்ப்பனருக்குமுள்ள தொடர்பைப் புராண—ஆகம வாயிலாக நன்கறிந்தவர்கள் ஒருபோதும்—எந்தக் காரணத்தைக் கொண்டும் நம்பவே மாட்டார்கள். ஆனால், பார்ப்பனரைச் சிவனுக்கு ஒப்பிட்டுப்பேசிய சேக்கிழாரே கூறுகின்றார், கலயர் என்ற பார்ப்பனர் தம்முடைய செல்வம் முழுவதையும் கடவூர்ச் சிவனுக்குத் தூபம் இடுவதில் செலவு செய்து, நாட்கணக்கில் பட்டினி கிடக்கும் அளவுக்கு வறுமையுற்றுக் கிடந்தார் என்று. அதோடு விட்டாரா சேக்கிழார் பெருந்தகை!

தானும், தன்னுடைய கணவனும், மக்களும், தன்னைச் சார்ந்த பிறரும் பட்டினியால் வாடிவதங்கும் கொடுமையைக்கண்டு மனம் பொறாது, தன்னுடைய தாலியை அவிழ்த்துக் கணவனிடம் தந்து, "இதனை விற்றாகிலும் நெல்வாங்கி வாரும்" என்று கூறுகின்றாள். கலயனாரின் மனைவி. அதனைப் பெற்றுக் கொண்ட கலயர், வழியிலே தென்பட்ட வணிகன் ஒருவன் கொண்டு வந்த குங்குலியத்தையன்றோ தாலியை விற்றுப் பெற்றுச் சிவனுக்குத் தூபமிட்டார் என்றும் சொல்லுகிறார். என்னே இவர்தம் போக்கு! இது, ஒருவேளை, சேக்கிழார் பார்ப்பனரிடத்துக் கொண்டுள்ள அளவு கடந்த அன்பையும் அடிமை மனப்பான்மையையும் காட்டுவதாயினும், ஒரு பெண், தானும் தன்னைச் சூழ்ந்துள்ள—நம்பியுள்ள மக்களும் பசியால் வாடி வதங்குவதைக் கண்டு மனம் பொறாது, தன்னுடைய தாலியை விற்றாகிலும் பசிக்கொடுமையைப் போக்கிக் கொள்ளலாம் என்று கருதி அதனை அவிழ்த்துத் தன் கணவனிடம் கொடுக்க, அவன், அதனை விற்றுக் கடவுளுக்குத் தூபமிடும் குங்குலியத்தைப் பொதிக் கணக்கில் வாங்கினான் என்று கூறியிருப்பது, மக்களை மண்ணாக மதிக்கும் ஒரு மதியிலியின் செயலாகும் என்று கூறுவதைக் குற்றமாக எந்தக் குறைமதியினரும் கூறமாட்டார்கள்.

இனித், தன் மனைவியிடமிருந்து நெல்வாங்குவதற்காப் பெற்றுக் கொண்ட போன தாலியைவிற்று நெல் வாங்கினார்; அந்தச் சமயத்தில் அந்தவழியாக ஒருவன் குங்குலியமும் கொண்டு வந்தான்; சிவனுக்குத் தூபம் இடுவதற்காகக் குங்குலியமும் சிறிதளவு வாங்கினார் என்ற போக்கிலாவது கதை அமைந்திருந்தால், ஏதோ, கலயர் சிவனிடத்துக் கொண்டுள்ள அன்பின் காரணமாகச், சிவனுக்குத்தூபமிடுவதையே தம்முடைய குறிக்கோளாகக்கொண்டிருந்ததால், எதிர்பாராத விதமாக வழியே வந்த குங்குலியத்திலும் சிறிதளவு வாங்கினார்; அதில் தவறொன்று மில்லை என்று வாளா இருந்துவிடலாம். ஆனால், கலயர் என் செய்தார்? தாலியை விற்றார்! குங்குலியத்தை வாங்கினார்! பசியால் வாடும் தம்முடைய மனைவி—மக்கள் எக்கேடு கெட்டாலும் நமக்கென்ன என்று எண்ணினார்! குங்குலியத்தை எடுத்துக்கொண்டு கோயிலுக்கு ஓடினார்! சிவனுக்குத் தூபமிட்டார்! அதன் பின்னராவது பசியால் வாடி வதங்கும் தம்முடைய மனைவி மக்களைப்பற்றி எண்ணினாரா? மனதில் ஏதாவது பதைப்போ, துடிதுடிப்போ ஏற்பட்டதா? ஒன்றுமில்லை தூபமிட்டார். துண்டைவிரித்தார்—கோயிலிலேயே உறங்கிவிட்டார். அங்கே கலயனாரின் மனைவியார், கணவன் தாலியை விற்று நெல்வாங்கிவருவாரென்று இரவில் நெடுநேரம் விழித்திருந்து எதிர்பார்த்தும், கணவன் வராமை கண்டு, உளங்கலங்க, உடல் பசியால்வதையப், படுத்துறங்கிவிட்டனர். இப்படிப் போகிறது கதையின் அமைப்பு. இந்த முறையில் கதையமைப்பது தான், உலகத்தோடு ஒட்டிவாழும் மக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய முறையா என்பதனை இனிமேலாவது சேக்கிழார் அன்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

இனிக், கலயனார் மனைவியும், அவர் மக்களும் பசியால் மெலிந்து உறக்கத்தில் ஆழ்ந்துகிடந்த சமயத்தில், கடவூர்ச் சிவனார், கலயனார் வீட்டை நெற்குவியலாலும், பொற்குவியலாலும் நிரப்பிக், கலயனார் மனைவியின் கனவில் தோன்றித், தாம் செய்த அற்புதத்தை அந்த அம்மையாருக்கு உணர்த்தி சென்றார் என்றும் சொல்லப்படுகின்றது. யாதொரு பொருளினிடத்தும் பற்றுக் கோடின்றி—விருப்பு வெறுப்பற்றுள்ளவராகப் பேசப்படும் விடையேறிக்குத், திடீரென்று ஒரு வீட்டை நிரப்புமளவுக்கு நெற்குவியலும், பொற்குவியலும் கிடைத்ததாம்! அப்பொருள்களை அவர் எங்கிருந்து—யாரிடமிருந்து—எப்படிப் பெற்றாரோ யாமறியோம். ஒருவேளை, தம்முடைய பொருளாளராம (Cashier) குபேரனிடமிருந்து பொற்குவியலைப் பெற்றிருக்கலாமென்று வைத்துக்கொண்டாலும்,

அதுவும் அவ்வளவு விரைவில்—நினைத்தமாத்திரத்தே கிடைக்கக் கூடியதல்லவே. குபேரன் வாழும் இடமோ பூலோகத்திலிருந்துமிகவும் தொலைவில் உள்ளதாகச் சொல்லப்படும் சிவலோகமன்றோ! சிவனார் பொற்குவியலால் நிரப்பப்பட்டதாகச் சொல்லப்படும் கலயனார் வீடு, பூலோகத்தில் ஒரு பகுதியாக உள்ள கடவூர் என்றும் சொல்லப்படுகின்றதே! அவ்வளவுதொலைவில் இருந்து அந்த இராத்திரி நேரத்தில் ஒரு வீட்டை நிரப்பக்கூடிய அளவு பொற்குவியலை, யார் — எப்படிக் கொண்டுவந்தார்களோ தெரியவில்லை. ஒருவேளை சிவனாருடைய ஏவற்படைகளான பூதகணங்கள் மூலம் கொண்டுவந்திருக்கக்கூடும். இங்ஙனமன்றி, வேறுவிதமாகச் சிவனுக்கு வரவழைக்கக்கூடியவசதியும், வாய்ப்பும் இல்லையே. பொற்குவியல்தான் குபேரனிடமிருந்து வரவழைக்கப்பட்டதென்று வைத்துக்கொண்டாலும் அந்த வீட்டை நிரப்பப்பட்டதாகச் சொல்லப்படும் நெற்குவியலை அந்தச் சிவனார் எங்கிருந்து பெற்றாரோ? ஒருவேளை நெல் விளைவதற்குக் காரணமாகவுள்ள மழைக்குத் தலைவனாகப் பேசப்படும் இந்திரனிடமிருந்து பெற்றாரோ, என்னவோ! இவை எல்லாம், சிவனால் நிரப்பப்பட்டதாகச் சொல்லப்படும் நெற்குவியலும், பொற்குவியலும் இந்த விதமாகக் கிடைத்திருக்கலாம் என்று நாமாக உய்த்துணர்ந்து கூறப்பட்டதாகும். புராணத்தில், நெற்குவியலையும், பொற்குவியலையும் எப்படிப் பெற்றார் என்பதற்கு விளக்கமில்லை. புராண அன்பர்களின் மனம்நொந்து விடக்கூடாதென்பதற்காக நாமாகக் கூறிய விளக்கம் இது.

இனிச், சிவனாருக்கு ஒரு பொருளாளரும் (குபேரனும்) மழையைப் பெய்விக்க ஒரு இந்திரனும் அவன் சொற்படி நடக்க ஒரு வருணனும், வேறு பல வேலைகளுக்கு வேறு பல தேவர்களும் உள்ளனர் என்பது உண்மையானால், சிவனார் தமக்கு வேண்டிய அனைத்தையும் அவர்களைக் கொண்டே செய்துகொள்ளலாமே! தமக்குக் கோயில் கட்டுவதிலிருந்து, தூபமிடுவதுவரையில் பூலோகத்தில் உள்ளவர்களையன்றோ எதிர்பார்க்கின்றார். கோயில் கட்டுவதற்குரிய பொருள் குபேரனிடத்திலும், அதனைக்கட்டக்கூடிய ஆற்றல பெற்ற மயனைத் தன் பக்கத்தில் வைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படும் சிவன், பூலோகத்தில் இருப்பவர்களை ஏன் இதற்காகத் துன்புறுத்தவேண்டும்? "எனக்குக் கோயில் கட்டு—குடமுழுக்கு நிகழ்த்து— தூபமிடு — வெள்ளியாலும், தங்கத்தாலும் வாகனங்கள் செய்துகா-இவை செய்வதற்கு உன்னிடம் பொருளில்லையா? வழிசொல்லுகிறேன் கேள் — வட்டிக்குமேல் வட்டி வாங்கு-ஒன்றுக்கு ஒன்பதாக லாபம் வைத்து பொருள்களை வில்- ஏழையின் வியர்வையை விழுமிய பொன்னுக்கு — இவைகளைச் செய்வதன்வாயிலாக எனக்கு வேண்டியதைச்செய்" என்ற முறையில் தானே நம்முடைய கடவுள் காரியம் ஆற்றுகிறார். இப்படிப்பட்ட ஒருகடவுளைத்தான் நம்மவரில் சிலர் விருப்பு வெறுப்பற்ற பெருந்தகைப் பெரும்பொருளென்று பிதற்றித்திரிகின்றனர். இப்படி ஒரு கடவுள்தான் நமக்கு வேண்டுமா? இப்படிப்பட்ட கடவுள் தான், தமிழ் மக்களின் ஒன்றே கடவுள் என்னும் கொள்கைக்கு ஏற்றதா? என்று என்னைக் கேள்வி கேட்ட அன்பரை நான் கேட்டேன். அவர், "நட்டகல்லைத்தெய்வமென்று நாலுபுட்பம் சாத்திச் சுற்றி வந்துமொண மொணென்றுசொல்லு மந்திரம் ஏதடா நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்" என்று கூறிவிட்டு வேறொன்றும் பேசாமல் போய்விட்டார். என்னைத் திக்குமுக்காடும்படி கேள்விகேட்ட அன்பரின் விடையைக் கண்டு நானும் களிபேருவகை எய்தினேன்.

இனித், திருப்பனந்தாள் என்னும் ஊரில் சாய்வுற்றுக்கிடந்த ஒரு சிவலிங்கத்தைக் கலயனார் நிமிர்த்தினார் என்று கூறப்படும் பகுதி, எள்ளி நகையாடி இகழ்ந்தொதுக்கக்கூடிய ஒன்றாகும். சாய்வுற்றுக்கிடந்த சிவலிங்கத்தை அவ்வூர் மன்னன், தன்னுடைய யானைப்படை, சேனைப்படை ஆகிய எல்லாவற்றையும் கொண்டு இழுப்பித்தும் அது நிமிராமல்சாய்ந்தே இருந்ததாம். யானைப்படையும், சேனைப்படையும் ஒன்று சேர்ந்து இழுத்தும் நிமிர்த்த முடியாதசாய்ந்த இலிங்கத்தை ஒரு தனி மனிதன் மிக எளிதாக இழுத்து நிமிர்த்தினான் என்று கூறப்படுவதைப்பார்த்து எள்ளி நகையாடாது வேறென்ன செய்வர்? அதிலும், சிவலிங்கத்தில் கட்டப்பட்டிருந்த கயிற்றைத்தன்கழுத்தில் பூட்டி இழுத்தான் என்பதாகக்கூறி மேலும் சேக்கிழார் தம் அறியாமையின் உச்ச நிலையை அடைகிறார். ஒருவனுடைய கழுத்துத்தான் அவனுக்கு உயிர்நாடி போன்றது. உயிரை விரைவில்போக்கக்கூடிய மிகமெல்லிய நரம்புகள் ஒருவனுடைய கழுத்தில்தான் அமைந்துள்ளன. தற்கொலைசெய்துகொள்ள விரும்புவர்கள்கூடப், பெரும்பாலும் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டே, மடிகிறார்கள். காரணம்: கழுத்தில் சுருக்கிடுவதால்தான் உயிரை மிகவிரைவில் போக்கக் கூடிய மெல்லிய நரம்புகள் அமைந்துள்ளன. கலயனாரும் தம்முடைய உடம்பில் இப்படிப்பட்ட ஒரு இடத்தைத்தான் தேடிக் கண்டுபிடித்துக் கயிற்றைப்பூட்டி, யானை—சேனையாலும் இழுக்கமுடியாத சிவலிங்கத்தை மிக இலகுவாக இழுத்து நிமிர்த்தினாராம். சாதாரணமாக ஒருவனுடைய கழுத்தை இலேசாகப்பிடித்தாலுமே அவன் உயிர் கலங்கும் நிலையை அடைவான் என்றால், கழுத்தில்சுருக்கிட்டுக்கொண்டு, பல படை பலத்தாலும் இழுக்க முடியாத ஒன்றை ஒருவன் இழுத்தான் என்பதை இவ்வுலகிலுள்ள எவருமே நம்பமாட்டார்கள். ஆனால், சேக்கிழார், இந்நிகழ்ச்சியை,

"மானவன் கயிறு பூண்டு
கழுத்தினால் வருந்தலுற்றார்"

என்று மிக எளிதாகக் கூறிவிட்டார். அதிலும் கழுத்தில் பூட்டி இழுக்கப்பட்ட கயிறு எப்படிப்பட்டது? நூலினாலான மிருதுவான கயிறா? அன்று! முடிச்சுகளோடு கூடிய பெரிய வலிய கயிறென்று சேக்கிழாரே கூறியுள்ளார். இப்படிப்பட்ட ஒரு வலிமை பொருந்திய முரட்டுக் கயிற்றை, மிகவும் மிருதுவான கழுத்தில் பூட்டி, இழுக்கமுடியாத சிவலிங்கத்தை இழுத்து நிமிர்த்தினான் ஒருவன் என்ற அண்டப்புளுகு ஆண்டவன்புராணத்திலன்றி, அறிவுடையோரால் ஆக்கப்பெறும் வேறு எந்த நூலிலும் இடம்பெற முடியாது.

இனிக், கலயனார் அந்தச் சாய்ந்த இலிங்கத்தை நிமிர்த்தியதற்கு அவருடைய அன்பேகாரணமாய் இருந்ததென்றும் சொல்லப்படுகிறது. இருக்கலாம். அன்பு ஒன்றுக்கே ஆண்டவன் கட்டுப்படுவார் என்று ஆகாங்களும் பிறவும் ஆரவாரம் செய்கின்றன. எனவே, கலயர், தம்முடைய

(20-ம் பக்கம் பார்க்க)

# ★ விலங்கு விடுபடுகிறது ★

[இரா. நெடுஞ்செழியன்]

வெள்ளையரின் விலங்குப் பிடியிலிருந்த பர்மா விடுபடுகிறது என்ற செய்தி, விடுதலை வீரர்களின் உள்ளத்தில், உவகைப் பெருக்கை உண்டாக்கும் என்பதில் ஐயமில்லை! பன்னெடு நாட்களாக, ஆறாயிர மைல்களுக்கு அப்பாலுள்ளவெள்ளையரின் ஆதிக்க வலையில் சிக்குண்டு சீரழிந்து கிடந்த பர்மா, நிமிர்ந்தெழும் நிலையை இன்று பெற்றுள்ளது! வாழ்க அதன் வெற்றி!!

1948-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஆறாம் நாள் பர்மியர்க்கு விடுதலை விழா நாள்! தங்கள் நாட்டைத் தாங்களே கோலோச்ச வேண்டிக், கொடுங்கோலைச் செங்கோலாக மாற்றித், தங்கள் கையிலேந்தித், தரணி ஆளப்புறப்படும் நாள்! பர்மிய விடுதலைக்காகப் பாடுபட்ட வீரன்—களங்கமில்லா உள்ளம் படைத்த காளை—நாட்டு மக்களுக்காக நலிவு பலவற்றை ஏற்று நின்ற நாயகன்—விடுதலைப் பாதை அமைக்கத் திட்டந் தீட்டிக் கொண்டிருந்த தீரன்—உலக மக்களால் போற்றப்பட்ட ஆங்—சான் இன்று குருதிக்கறை படிந்த உடலோடு கல்லறையில் ஒழியாத் துயில் புரிந்து கொண்டிருக்கிறான். மக்கள் உறங்கிக்கொண்டிருந்த நேரத்தில் விடுதலைக் குரலை முழக்கிக் கொண்டிருந்தான்; மக்கள் இன்று விடுதலை முழக்கம்செய்கின்றார்கள், அவன் நீங்கா உறக்கத்தில் சாய்ந்துகிடக்கிறான். பகைவர்களால் அவன் உடலில் பாய்ச்சப்பட்ட குண்டுகள் ஏற்படுத்திய புண்களில், மக்கள் நீர்வழியும் கண்களோடு நின்று மௌனமலர்களைத் தூவினார்கள். நீர் வழிந்த மக்களின் கண்கள் இன்று மலர்ந்துள்ளன. அதைக் கண்டு களிக்க வேண்டிய காளை கொடுந்தரையில் வீழ்ந்து கிடக்கிறான். அந்த வீரனின் இலட்சியம் நிறைவேறுகிறது. அடுத்த ஆண்டு முதல் திங்கள் ஆறாம் நாளில்!

பர்மிய பாசிச எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரான ஆங்சான் 1947-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31-ம் நாள், இன்னும் ஓராண்டிற்குள் விடுதலை கிடைத்தாக வேண்டும் இல்லையேல், விடுதலைப் போர் துவக்கப்படும் என்று வெஞ்சின மொழி கூறி விடுதலைக் குரலை எழுப்பி நின்றான். குறித்த காலவரையறைக்குள்ளேயே பர்மாவுக்கு விடுதலை கிட்டிவிட்டது. முன்பு இந்தியாவிற்கு வழங்கப்பட்ட 1935-ம் ஆண்டு அரசியல் சீரமைப்புத் திட்டம் போன்ற தொருதிட்டத்தை, 1945-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பர்மாவிற்கு வெள்ளைக்கார ஏகாதிபத்ய அரசாங்கம் அளித்தது. அது கொடுக்கப்பட்ட மூன்று ஆண்டிற்குள் பிரிட்டிஷ் பொது நல அமைப்பிலிருந்து (British Commonwealth) பர்மா விலகிக்கொள்ளவும், முழுவிடுதலையைப் பெறவும் ஆனநிலைமை, உள்ளபடியே பாராட்டி மகிழ்வதற்குரியதாகும். —ஆங்—சானின் தலைமையின் கீழ்த் திரண்ட மக்களின் உணர்ச்சி வேகத்தைக் கண்ட பிரிட்டன், இனியுங் காலந்தாழ்த்தினால் தனக்கிருக்கும் எஞ்சிய வலிவும் அடியோடு அற்றும் போகும் என்று கருதிப், பர்மாவுக்குவிடுதலைவழங்கத் துணிந்திருக்கிறது. இந்தக்காலம் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் சரிந்து கொண்டிருக்கும் காலமாகும். அந்தச் சரிவிலே ஒருகட்டந்தான் பர்மாவிடுதலை!

பிரிட்டிஷ் பொதுநல அமைப்பிலிருந்து(BritishCommonwealth) விலக விரும்பியிருக்கும் பர்மா, பிரிட்டனோடு தொடர்பு கொண்டிருக்கச் சம்மதித்திருக்கிறது. நாட்டுப் பாதுகாப்பு முறையில ஒன்றிற்கொன்று உதவிசெய்து கொள்வது என்று, இராணுவ ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் பொதுநல அமைப்பிலுள்ள நாடுகளைத்தவிர வேறு எந்த நாடுகளோடும் செய்து கொள்வதில்லை என்பதைப் பர்மா கடைபிடிக்க வேண்டு என்றும் ஆங்கிலோ—பர்மா ஒப்பந்தத்தில் கண்டிருக்கின்றன. பர்மாவிலிருக்கும் பிரிட்டிஷ் பட்டாளங்கள் அடுத்த ஆண்டு பிப்ரவரித் திங்களில் வெளியேறிவிடும். ஆனால் பர்மியப் பட்டாளங்களுக்குப் பயிற்சி அளிக்கவேண்டிச், சில பிரிட்டிஷ் பட்டாளங்கள் கொஞ்ச நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படலாம். அதைப்பர்மா விடுதலைப்பெற்ற பிறகு நன்கு ஆலோசித்து முடிவு செய்யும் என்று தெரிகிறது. பிரிட்டனுக்குப் பர்மா கொடுக்க வேண்டிய கடனில் 15000000(ஒருகோடியே ஐம்பது இலட்சம்) பவுனைத்தள்ளி விடப்பிரிட்டன்சம்மதித்திருக்கிறது. மீதி 49,00,00,000 (நாற்பத்தொன்பது கோடி—பர்மா நிதிமந்திரிகணக்குப்படி) ரூபாயையும் 1952-ம் ஆண்டிலிருந்து 20 தடவைகளில் பர்மா செலுத்திவிடவேண்டுமென்று ஒப்பந்தம ஏற்பட்டுள்ளது. பிரிட்டன்—பர்மா ஆகிய இரண்டு நாடுகளுக்குமிடையே உள்ள வியாபாரத் தொடர்புகள் தனியே ஏற்படுத்திக் கொள்ளப் போகும் வியாபார ஒப்பந்தத்தின் மூலமாகக் காப்பாற்றப்படும். இவ்வாறாக உறவு கொள்ளும் முறையில சில ஒப்பந்தங்களை மட்டும் செய்துகொண்டு, அரசியல் அடிமைத்தளையை நொருக்கிவிட்டு, விடுதலையைத் தழுவ பர்மா காத்துக் கொண்டிருக்கிறது.

சென்ற உலகப் பெரும் போர் நடந்தபோது, ஜப்பானிய வெறியர்களால் சீர்குலைக்கப்பட்டுப் பாழ்படுத்தப்பட்ட பர்மா, தாகின்-நூ தலைமையின் கீழ் விடுதலையைக் காணப்போகிறது. பர்மா பாசிஸ எதிர்ப்பு இயக்கத்திற்கு இன்று பெருவாரியான மக்களின் ஆதரவு கிடைத்துள்ளது. அந்த ஆதரவைத் துணைகொண்டுதான் தாகின்-நூ இன்று பிரதமராய்க் காட்சியளிக்கிறார். ஜனவரி 6-ம் நாளுக்குப் பிறகு பர்மாவின் தலைவராகக் கூட அவர் காட்சியளிக்கக் கூடும். போர்க்களமாக்கப்பட்டுச், சூறையாடப்பட்டுக், குழப்பநிலையிலுள்ள பர்மாவை அமைதியான நிலைக்குக் கொண்டுவந்து பொலிவுறச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு, புதிதாக அமையப்போகும் விடுதலை ஆட்சி மன்றத்தின் மீது விழுகிறது. போர்க்காலத்தில் காட்டின் பலவிடங்களில் விடப்பட்ட ஏராளமான ஆயுதங்கள் மக்கள் கைகளில் சிக்கியுள்ளன. அப்படிச் சிக்குண்டதின் காரணமாகத்தான் ஆங்-சானும், அவரைச் சேர்ந்த அறுவரும் கொடியவரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாயினர். இத்தகைய கொடுமை, இனியும் நிகழாவண்ணம் செய்ய, மக்களிடம் பதுங்கிக் கிடக்கும் ஆயுதங்களைப் பறிமுதல் செய்ய வேண்டும். பர்மாவில் அமையப் போகும் ஆட்சி, சமதர்ம மணங் கமழும் குடியரசு ஆட்சியாகத் திகழும் என்று தெரியவருகிறது. பர்மாவுக்கு இவ்வளவு விரைவாகவும், எளிதாகவும் விடுதலை கிட்டுவதைப் போன்றதொரு நிகழ்ச்சி இதற்கு

முன்வரலாற்றிலேயே காணமுடியாது!

பர்மா இயற்கையிலேயே வளப்பம் பொருந்திய நாடு. அது, சிறந்த கடற்கரைத் துறைமுகமான ரங்கூனைக் கொண்டிருக்கிறது. இந்தியாவுக்குப் பஞ்சம் ஏற்படாவண்ணம், பன்னெடுங்காலமாக அரிசி கொடுத்துதவி வந்தது பர்மா நாடேயாகும். போரின் காரணமாகச் சென்ற சில ஆண்டுகளாக அவ்வுதவியைச்செய்ய அதனால் இயலாமல் போயிற்று. அது நன்னிலை அடைந்த பிற்பாடு மீண்டும் அந்த உதவியைச் செய்ய மறுக்காது என்பதில் ஐயமில்லை. ஐராவதி என்ற பேராறு நீர்க்கால்களை எங்கணும் பாய்ச்சி, அந்நாட்டினை நீர்வளமுள்ளதாகச் செய்து, கழனிபல புதுக்கி வருகிறது. தேக்கு, மண்ணெண்ணெய், டங்ஸ்டன் என்னும் உயர்ந்த உலோகம், இதர உலோகங்கள் ஆகியவற்றைப் பெருவாரியாகக் கொண்டிருப்பதால் செல்வஞ்செழித்த நாடாக அது இலங்குகிறது. ஆசியாக்கண்டத்திலுள்ள நாடுகளில் அது அளவில் சிறிதாக இருப்பினும், செல்வத்தால் சிறந்து விளங்குகின்றது.

வளமிகுந்த பர்மா; ஆனால் ஏமாந்த பர்மா! பர்மாவின் பொருளாதாரம் பலகாலமாக வெள்ளையர்களாலும், இந்தியர்களாலும், சைனாக்காரர்களாலும் சுரண்டப்பட்டு வருகிறது. வெள்ளையர்கள் பெருந்தொழிற்சாலைகள் வைத்தும், பெருந்தோட்டக்காடுகள் வளர்த்தும் பொருளைக் கொள்ளை கொண்டனர். இந்தியர்கள் குறிப்பாக நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் வட்டிக்குக் கடன் கொடுத்துப், பெரும்பொருள் ஈட்டி விளை நிலங்களையெல்லாம் விலைக்கு வாங்கினர். சைனாக்காரர்கள் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டுப் பணத்தைச் சுரண்டி வந்தனர். இந்தச் சுரண்டல்களை நிறுத்த வேண்டும் என்ற உணர்வு பர்மியர்களிடையே பரவி வருகிறது. அமெரிக்கப் பத்திரிகை நிருபரான ஆன்ட்ரூ ராத் என்பவர் குறிப்பிடும் பர்மாவைப்பற்றிய செய்தியொன்றில்

"பர்மாவில் வாழும் இந்தியர்களில் பெரும் பகுதியினரும், சைனாக்காரர்களில் பெரு பகுதியினரும் இரண்டு மூன்று தலைமுறைகளாக வாழ்ந்து வந்த பிறகும், தங்களுடைய தாய் நாடுகளான இந்தியாவிடத்தும், சைனாவிடத்தும் பற்றுக் கொண்டிருப்பதோடல்லாமல், தங்கள் சேமிப்பை அந்த நாடுகளுக்கே கொண்டுபோய்ச் சேர்ப்பது பர்மியர்களின் சந்தேகங்களை வலுவடையச் செய்கிறது. இந்த இழப்பைப் பற்றிப் பர்மா மிகவும் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. ஏனென்றால் பர்மாவின் பொருட் குவியல் கரைவதற்கு ஒரு காரணமாக விளங்குவது பிரிட்டனுக்கும், இந்தியாவிற்கும், சைனாவிற்கும் இலாபஞ் சென்று சேருவதாகும்" என்று கூறுகிறார். பர்மியர்களின் சந்தேகப் பார்வை பிரிட்டிஷார், இந்தியர், சைனாக்காரர் ஆகியோர்மீது விழ ஆரம்பித்திருப்பதில் வியப்படைவதற்கில்லை. விடுதலையின் வாயற்படியின்மேல் நிற்கும் பர்மியர் தங்கள் நாட்டுச் செல்வம் தங்கள் நாட்டிலேயே தங்க வேண்டும் என்று எண்ணுவதோடு மட்டுமல்லாமல், தாங்களே அதன் பயனை நுகரவேண்டும் என்றும் கருதுகிறார்கள். இந்த எண்ணம் தோன்றுவது இயற்கை. ஒரு நாட்டினர், இன்றுள்ள உலகச் சூழ்நிலையில் இத்தகைய எண்ணத்தைக் கொள்ளவேண்டியது மிக முக்கியமான கடமையுமாகும்.

1937-ம் ஆண்டு வரையில் பர்மா இந்திய துணைக்கண்டத்தின் ஒரு மாகாணமாக விளங்கிவந்ததால் இந்தியர்கள் சென்று குடியேற வசதி ஏற்பட்டிருந்தது. அப்படிக் குடியேறி வாழும் இந்தியர்களின் நிலை, தற்பொழுது நெருக்கடியான கட்டத்திற்கு வந்திருக்கிறது என்றாலும், இந்திய அரசாங்கமும், பர்மா அரசாங்கமும் சேர்ந்து இரண்டிற்கும்

(2-ம் பக்கம் பார்க்க)

## மாங்கல்யத்தை விற்று

18-ம் பக்கத் தொடர்ச்சி

அன்பின் வலிமையினால்சாய்ந்திருந்த சிவலிங்கத்தை நிமிர்த்தினார் என்று கூறப்பட்டிருந்தால், நமக்கும் இது பற்றி இவ்வளவு நீண்ட ஆராய்ச்சி செய்வதற்கு இடம் இருந்திருக்காது. ஆனால் நிகழ்ச்சி அவ்விதம் அமையவில்லையே! முன்னுக்கு பின் முரணாக வன்றோ கூறப்பட்டுள்ளது, "மான வன் கயிறு பூண்டு கழுத்தினால் வருந்தலுற்றார்" என்று முதற் பாட்டிலும், "நண்ணிய ஒருமை அன்பின் நாருறு பாசத்தாலே" என்று அடுத்த பாடலிலும் கூறப்பட்டிருக்கிறதே! முன்னது, முடிச்சுகளோடு கூடிய வலியபெரிய கயிறென்றும் பின்னது, அன்புக்கயிறென்றும் சொல்லப்படுகின்றதே! இவ்விரு கயிறுகளில், எந்தக்கயிற்றைக் கொண்டு அந்தச் சாய்ந்த சிவலிங்கத்தை இந்தக் கலயர் இழுத்து நிமிர்த்தினார் என்பது தெரியவில்லை.

கலயனார் திருப்பனந்தாளுக்கு வந்தார்; யானைப்படையும் சேனைப்படையும் சாய்ந்த சிவலிங்கத்தை இழுப்பது கண்டார்; நகைத்தார்; மன்னனை நோக்கி, இதனையெல்லாம் சாய்ந்த சிவலிங்கத்தை இழுத்து நிமிர்த்த முடியுமா? இதோ பார், நான் ஒரு விநாடியில் அதனை நிமிர்த்துகிறேன் என்று புகன்றார். உடனே சிவலிங்கத்தின் முன் சென்றார். சிவலிங்கத்தில் பூட்டப்பெற்றுள்ள கயிற்றை அவிழ்த்தெறியும்படி சொன்னார். "அன்புருவாய அண்ணலே! அடியேன் நின்பால் கொண்டுள்ள மாறா அன்பு மாசற்றதென்றால், உடனே நின்னுடைய சாய்வு நிமிர்வதாக" என்று கூறி அடிபணிந்தார்; உடனே சிவலிங்கம் நிமிர்ந்து நேராக நின்றது என்ற முறையிலாவது கதை அமைந்திருந்தால், ஆண்டவன் அன்புக்கு மட்டுமே அடங்கி நிற்பான் என்பதாவது நிலைத்து நிற்க முடியும். இந்நிகழ்ச்சி, அதனையும் தவிடுபொடியாக்கிவிட்டதே!

இனி, அன்பொன்றுக்குத்தான் சிவன் கட்டுப்படுவான் என்பது முற்ற முடிந்த உண்மையானால், அன்புருவாய அண்ணலுக்கு ஆயிரமாயிரம் வேலி நிலங்களேன்? படமாடுங் கோயிலுக்குள்ள நிலபுலங்களை நடமாடுங் கோயிலுக்கு ஆக்க வேண்டுமென்றால்ஆண்டவன்பிரதிநிதிகள் அலறித் துடிப்பானேன்? அவருக்கு அரமனைபோன்றகோயில்களும்,கோபுரங்களும் ஏன்? அவரைப் பாதுகாக்க ஆயிரமாயிரம் அக்ரகாரப் படையேன்? நவரத்னகண்டியும், வைரமுடியும், தங்கவாகனமும் ஏன்? அன்பு வடிவான ஆண்டவனுக்கு அன்பு மொழி ஒன்றே போதாதா? எண்ணிப்பாருங்கள்.

✲

Edited Printed Published by C. N. Annadurai, M. A., at "Dravida Nadu" Press,
317—319 Hodgsonpet Conjeeveram.